Registered M. 916

THE VEDANTA DIPIKA

A RELIGIOUS & PHILOSOPHICAL MONTHLY.

Vol. VIII. November 1917. No. 2

Editor.—DEWAN BAHADUR T. T. RANGACHARIAR, B.A., B.L.

வேதாந்த தீபிகை

ஸம்புடம் 8.] பிங்கள ஹூ கார்த்திகை [ஸஞ்சிகை 2.

1. பத்ராதிபரின் குறிப்புகள் 49
2. ஆர்யர் பூர்வ சரித்ர சிந்தனை
பத்ராதிபர் 60
3. குருபரம்பராநு ஸந்தான க்ரமம்
ஸ்ரீ. உப. க்ருஷ்ணமாசார்யர் 65
4. ஸ்ரீ தேசிக ப்ரபந்தம் 72
5. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்
ஸ்ரீ. எஸ். உப. வாஸுதேவாசார்யர் 79
6. வேதாந்த ஸங்க்ரஹம்
ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ... 84
7. கடிதங்கள் 91
8. பூகோள சாஸ்த்ரம்
ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர் 94
9. பத்ரிகா விமர்சம் 97
10. இவ்வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம் ... 99

PUBLISHED BY THE SECRETARY SRI V. S. SABHA.

K. R. Press, Madras.

Copy-right reserved.

Annual Subscription Rs. 3-0-0] [Single Copy As 4

ஸ்ரீ வேதாந்த தீபிகை.

இப்பத்ரிகையின் முக்கிய நோக்கங்கள்.

(1) உபநிஷத்துக்களிலும், ப்ரஹ்மஸூத்ரம் பகவத்கீதை முதலான க்ரந்தங்களிலும், ஆழ்வாராசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகளிலும் இருக்கும் விசிஷ்டாத்வைத மதத்தின் தத்வங்கள் வெளியாக்கப்படும்.

(2) அத்வைதம், த்வைதம் முதலான மதங்களின் ஸ்வபாவங்களும் அந்தந்த மதங்களை ஆராய்ந்தவர்களைக்கொண்டு எடுத்துக் கூறப்படும்.

(3) தைவபக்தி முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் கதைகளும் வெளிவரும்.

இதைப்பற்றி சில அபிப்ராயங்கள்.

(1) **இந்து நேசன்** :—______________ 12 - மாத பத்திரிகையின் கிரயம் ரூபாய் இரண்டாயிருப்பினும், அமைக்கப்பெற்ற விஷயங்களின் சீரும், பாஷையின் நடையும் விலையில்லா மாணிக்கங்களென்றே சொல்லலாம்.

(2) மதிராஸ் ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதரான மஹாமஹோபாத்தியாயர் வே. ஸ்வாமிநாத ஐயர் : இது தென்னாட்டுப்பத்திரிகைகளுக்குள் முதன்மையான தென்று சொல்லலாம்.

(3) மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபர் :—

..............இதில் விசிஷ்டாத்வைத மத ஸம்பந்தமான உபந்யாஸங்களும் வேதாந்தார்த்த விசேஷ விசாரங்களும் புராணகதைகளும் ஆசார்ய சரித்ரங்கள் முதலியவை வெளியிடப்படுகின்றன. இதற்கு விஷயப்ரதானஞ் செய்பவர்கள் உபயவேதாந்த பாரங்கதர்களாகவும் சாஸ்த்ர ஸம்பந்நர்களாகவும் காணப்படுதலால், பாரலௌகிக புருஷார்த்தங்கள் ப்ரமாணங்களைக்கொண்டு இதில் நன்கு விவரிக்கப்படு மென்று தோன்றுகின்றது.

NOTICE.

Subscribers are requested to quote the wrapper number in all their communications to the manager. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "**பத்ராதிபர் வேதாந்த தீபிகை**, திருவள்ளூர், செங்கல்பட்டுஜில்லா", என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும், கட்டணம் கட்டுவதும், விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும், மற்றெல்லா விஷயங்களும், விலாஸத்தில் குறித்திருக்கும் நம்பரைக் கண்டு, "**மானேஜர், வேதாந்த தீபிகை, 11,** கேசவப்பெருமாள் ஸந்நிதி வீதி, மயிலாப்பூர், மதிராஸ்" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 3.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 8.] பிங்கள௵ கார்த்திகை௴ [ஸஞ்சிகை 2.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே । வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

பாஶ்சாத்ய வித்யையின் ஒரு பலம்.

பல சிறிய கப்பல்கள் கடற்கரையில் நங்கூரங்களால் ஒவ்வோரிடங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நங்கூரங்களுடைய பலத்தை விஞ்சியதோர் காற்றுமழை கிளம்பி, அவற்றின் கட்டுகள் அறுபட்டுப் போனபிறகு, அந்நாவங்கள் எல்லையற்ற கடலின்மீது பல புறமும் பறந்தோடிப்போகின்றன. பிறகு, அவற்றை ஒன்றுகூட்டிப் பூர்வஸ்தாநத்தில் நிவேசித்தல் ஸாத்யமற்ற விஷயமாகின்றது. அக்காற்றுமழைக்கு மேற்பட்ட வீர்யமுடையது தத்கால பாஶ்சாத்ய வித்யை. அதைக் கற்பவர்கள் நாவங்களின் ஸாத்ருஶ்யத்தைக் கொண்டவர்கள். வைதிக மர்யாதைதான் அவர்களை முன்கட்டிய நங்கூரங்கள். அதை அவர் அதிலங்கித்து மனம்போனபடிப் பல வழிகளில் பாய்ந்தோடுகின்றார்கள்.

காற்று மழையின் வேகத்தால் நாவங்கள் பறப்பதையொத்து, நூதநவித்யையின் மாயையால், விவேசநஶக்தி அற்றுப்போய், நமது பிள்ளைகளுடைய புத்திகள் ப்ரவஹிக்கும் மார்க்கங்கள் எல்லையற்றுள. ஒவ்வொரு யோசனை அவர்கள் மநஸ்ஸுகளைப்பற்றிப் போய், அந்யதா யோசிப்பவர் மேல் பாணம்போல் போய் விழுந்து, நிந்தையாயும் தூஷணையாயும் பருஷோக்திகளாயும் பரிணமமடைந்து, அன்னவர்களுக்கு இடுக்கண்களை விளைவிக்கின்றன.

அவ்வண்ணம் தட்டுத்தடுமாறிப்போன ஒருவனால் இந்தியர்க்குள் வையாத வகுப்பு ஒன்றுமில்லை. அவனும் அவன் போலியரும்மட்டும் அவன் திட்டுக்கு லக்ஷ்யமாகமாட்டார்போலும். ஆயினும் ப்ரஜ்ஞாவான்கள் அவன் உக்தியையும் யோசிக்கப் பொருந்தும். நமது மதப்ரவர்த்தகர்களையும், தேவாலயங்களையும் குறித்து :—

“இந்தியாவின் ஆசார்யர்கள் முற்றிலும் அசுத்தர்கள். அவர்கள் தாழ்மையில் மிகுந்த பல படிகளில் குதிக்கத் தயாராகிக், கேடுற்றுக் கீழ் விழுந்து, உலகத்தவர்க்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறார்கள். இந்திய தேவாலயங்கள் அவற்றால் முன் பெருகிய நன்மைகளைத் துறந்தன. பூஷணங்களால் அலங்க்ருதங்களாய், அவற்றின்கண்ணுள்ள விக்ரஹங்களோடு, அவையும் பாத்யம் கொண்டாடும் சிலருடைய ஸொத்துக்களாகப் போயின. அவர்களோ, ஸேவார்த்திகளுடைய கட்டணங்களை நிலைக்கச் செய்வதற்காக, அவ்வாலயங்களை வரிதண்டும் ஆபீசுகளாக வைத்துக்கொண்டிருக்கின்றார்கள்” என்று எழுதுகின்றான்.

இதைப் படிக்க நாம் வருந்துகின்றோம். இது முற்றிலும் நிஜமன்று; பொய்யுமன்று. ஆனால், நம்முடைய மதப்ரவர்த்தகர்களுடைய செயல்களையும், நம்முடைய தேவாலயங்களுடைய ஸ்திதியையும் நன்றாக யோசித்தால், மேலெடுத்த பருஷோக்திகளில் வாஸ்தவாம்சம் யாவர்க்கும் புலப்படும். தேசிகன் ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில், ஸந்யாஸிகளும் ஸததம் அர்த்தாந்வேஷிகளாகப் போந்தாரென்று சொல்கின்றார். ஆனால் அங்குரைக்கப்பட்ட அர்த்தாந்வேஷணவ்யாஜங்கள் இக்காலம் புண்ய ப்ரவ்ருத்திகளெனக் கொண்டாடலாம். ஆர்ஜிக்கப்பட்டது ஸத்துக்க

ளுடைய த்ரவ்யமாயிருந்து, வித்தாந்த ப்ரவசநத்தின் பொருட்டு அது செலவிடப்பட்டதாகில், இக்காலம் குற்றங்காண அமைய மாட்டாது. அவ்வண்ணம் நடைபெறவில்லையே என நாம் கலை சிக்கின்றோம்.

தேவாலயங்களின் கேடு பலவிடங்களில் ப்ரகாசிக்கக் காண் கின்றோம். ஸமீப காலங்களில் நம்முடைய ஜந்ம பூமிக்கு நாம் சென்றிருக்கையில், நீடித்த காலமாய் பகவத் ஸந்நிதியில் நிலைத் துப்போன மேலே விவரிக்கப்பட்ட ஸ்திதியானது மாறும்படி யான காலம் இன்னும் வரவில்லையென்று கண்டு வருத்தமுற் றோம். ஆஸ்திகர்களான விசாரணை கர்த்தர்கள், பகவான் திரு வுள்ளம் உகக்கவேண்டுமென்று யோசிக்காவிட்டாலும், லோகாப வாதத்தையாவது யோசித்து, விஷ்வக்ஸேநாதிகாரத்தை ஸாவ தாநத்துடன் நடத்துவார்களென்று நம்புகின்றோம்.

கலாப்ரயுக்தமான த்வேஷங்கள் பகவத் ஸந்நிதிகளின் ப்ர யோஜநத்தைக் குறைக்கின்றன. அப்படிப்பட்ட த்வேஷங்கள் நிவ்ருத்தமான ஸந்நிதிகளிலும் விசாரணைகர்த்ருத்வம் தர்மமுறை யில் நடக்கவில்லை. இதைப்பற்றிக் குற்றம் காண்கின்றவன் நம் முடைய ஜநங்களைப் பழிக்க ந்யாயமில்லை. விசாரணை கர்த்தர் கள் ஸேவார்த்திகளுக்கு அடங்கினவர்களல்லர். அவர்களுடைய அபராதங்களை நிவர்த்திக்கத் தத்கால சட்டம் போதாது. அது இடங்கொடுக்கின்றவரையில் கூட ந்யாயஸ்தலங்கள் பரிஹாரம் கொடுப்பதில்லை. கிடைக்கும் பரிஹாரமும் பகு த்ரவ்யவ்ரயத் தாலும் சரீர ப்ரமத்தாலும் தேடத்தக்கதாயிருக்கின்றது. இந்த ஸந்நிவேசங்களைக் குற்றம் காண்போர் யோசிக்கத் தக்கவர். கோவில் சொத்து விசாரணை கர்த்தர் ஸ்வாதீநத்திலிருப்பதால், அதை யதேச்சையாகச் செலவிட்டு, அவர்கள் முடிவில் ப்ராயேண ஜயிக்கின்றார்கள். 'அர்த்தவான் ஸர்வத்தையும் ஸாதிக்கின்றான்' என்பது ப்ராசீநவசநம்.

ஸந்நிதி கிங்கரர்கள் ஸரியானவர்களாய் ஏற்படுவது தத்கா லம் துர்லபம். ப்ராயேண அவர்கள் பாத்யம் கொண்டாடுகிறவர் கள்; தமக்கு ஒரு கடமை இருப்பதாய் எண்ணுகின்றாரில்லை. அவர்களுடைய ஜீவநம் அநேகமாக அந்யாயார்ஜித த்ரவ்யத்தா லேயே நிறைவேறுகின்றது. அவர்களுக்குத் தக்க வேதநம் கொ டுக்க ஸந்நிதிகளுடைய வருமானம் போதுமானதல்ல.

"நித்யஸித்தமானதோர் ஆகாரத்துடன் பகவான் கூடினவ னென்றும், அவன் ஸமஸ்த சக்திகளுடன்கூடிய பரமேச்வரன் என்றும் விச்வாஸம் யார்க்குண்டோ அவர்க்கு அவன் ஸாந்நித் யம் செய்கின்றான்"; "திவ்யமங்கள விக்ரஹத்தினுடைய ஆகாரத் தோடொத்ததாய், அப்ராக்ருதமான ஒரு திருமேனியுடன் கூடித் திவ்யமங்கள விக்ரஹத்தில் அநுப்ரவேசித்து நிற்கின்றான்", என் றும், ப்ரமாணங்களை விச்வஸித்தவர்களுக்குப் பூஷணாலங்க் ருதவிக்ரஹங்கள், பூஷணாலங்க்ருதவிக்ரஹங்களாய்ப் பாவிக்க மாட்டா. ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் ஈடுபட்டவண் ணம், திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபியாக அவதரித்த எம்பெரு மானை அநுபவிப்பவர்க்கு இப்போதும் குறையில்லை. விக்ரஹத் தைக் காணுபவர்க்கு விக்ரஹந்தான் புலப்படும். பகவானைக் காண விரும்பினவர்க்கு அந்த விக்ரஹவிசிஷ்டனான புருஷோத்த மன் தர்சநமளிப்பன்.

பக்தர்கள் அநுபவிக்கமாத்ரம், அர்ச்சாரூபத்தை உகந்த பரம புருஷன் உதவுகின்றான். நாஸ்திகர் குற்றம்சாட்ட அவகாசம் உண்டாகின்றது என்பதை எண்ணி, ஸந்நிதி கிங்கரர்களும் ஸேவா ர்த்திகளும், அவர்களுடைய ராகத்வேஷப்ரயுக்தமாய் ஜநிக்கி கின்ற வாக் ப்ரவ்ருத்திகளையும் காயப்ரவ்ருத்திகளையும், பகவானு டைய ஸந்நிதிமாத்ரத்திலாவது விலக்கி வர்த்தித்தாராகில், வர வரக் குறைந்துபோகின்ற சிஷ்டர்களுடைய ஸமூஹத்துக்கு அதை ஒரு அத்ருஷ்ட விசேஷமென்று எண்ணலாம்.

* * * * * *

விப்ர த்வேஷம்.

நமது தேசத்தில் பகு ஜநங்கள் ஸ்வாராஜ்யமெனப்பட்ட ஐஹிக புருஷார்த்தாபேக்ஷையால் ஆகர்ஷிக்கப் பட்ட புத்தியுடன்கூடி யிருக்கின்றனர். சிலர் பற்பல காரணங்களையிட்டு மேற்சொன்ன ப்ர யத்ந விரோதிகளாயும் ப்ரகாசிக்கின்றார்கள். இப்படிப்பட்ட விவாத ஸம்பந்தமாக ப்ராஹ்மண ஜாதியும், ப்ராஹ்மண்யமும், ஆர்ய ஸம்ப்ரதாயங்களும், ஸம்ப்ரதாயக்ரந்தங்களும், வர்ணதர் மங்களும், ஆச்ரம தர்மங்களும் பலவகையான தூஷணைகளுக்கு லக்ஷ்யமாகின்றன. நமது ஸநாதநதர்மமெனப்பட்ட வைதிக ஸம் ப்ரதாயத்துக்கு இம்மாதிரியான அபாயமானது பூர்வம் பௌத்த

ஸமயமும் அர்ஹத ஸமயமும் உண்டாகிப் பெருகிய காலங்களில் ஸம்பவித்தது. அப்போது அநேக மஹாத்மாக்கள் ஜநித்துச் சத்ருக்களைக் கண்டித்து, அவர்களுடைய, ஸமயங்களை நிரஸித்து, வைதிக ஸம்ப்ரதாயத்தை ஸ்தாபித்தார்கள்.

சென்ற நூறு ஸம்வத்ஸரங்களாகப் பாஸ்சாத்யவித்யையானது நம் தேசத்தில் பரவி, நமது பூர்வ வித்யைக்கு ப்ரசாரம் குன்றிப்போய், ஸ்வபாவத்தில் ஸதா சலிக்கின்ற தம்முடைய மநஸ்ஸை ஸமீசீநபுத்தியைக்கொண்டு அடக்காமல், விஷயங்களால் ஆகர்ஷிக்கப்பட்ட இந்த்ரியங்கள் காட்டின வழிகளில் செலுத்துகின்ற நம்முடைய நூதநவித்யார்த்திகளில் பலர், வைதிக ஸம்ப்ரதாயத்துக்கு அபாவத்தையே உண்டுபண்ண ப்ரயத்நபரர்களாக இருக்கின்றார்கள். ஆதலால் அந்த ஸம்ப்ரதாயத்தை ஆஸ்திகாக்ரேஸரர்கள் ரக்ஷிக்க முயலவேண்டுமென்று எண்ணித் தத்ஸம்பந்தமாக மாஸந்தோறும் சிலகாலம் நாம் எழுதுகின்ற விஷயத்தைத் தீபிகாபிமாநிகள் அங்கீகரிப்பார்களென்று ப்ரார்த்திக்கின்றோம்.

ஒரு மதத்தில் பத்தவைரம், அந்த மதத்தைவிட்டு மதாந்தரத்தில் ப்ரவேசிக்கின்றவனிடம் விசேஷித்து ப்ரகாசிக்குமென்பது லோகப்ரஸித்தம். அப்படிப்பட்ட மதத்வேஷம் அம்மதரக்ஷகரிடமும் பரவும். இவ்வண்ணம் ரவீந்த்ரநாதர் முதலானோருடைய விப்ரத்வேஷம் ஜநித்திருக்கவேண்டும். பூர்வகாலத்தில் அஸுர ராக்ஷஸர்கள் வேதத்தினிடமும், வேத தேவதைகளிடமும், வைதிக கர்மங்களினிடமும், ப்ராஹ்மணர்களிடமும் வைரம் பாராட்டினார்கள். அதற்குக் காரணங்கள் பலவாறாக இருந்திருக்கக்கூடும். ஒரு காரணம், த்வேஷிப்பவர் மதங்கள் ஆர்யமத பிந்நமாக விருந்தனவென்பதே. அவ்வண்ணமே, இத்தேசத்தைப் படையெடுத்து ஆக்ரமித்த மஹம்மதியர்கள் ஆர்யமத த்வேஷிகளாயிருந்து, ஆர்யஜாதி ஜநங்களுக்குப் பலவகையாக ஹிம்ஸையை அளித்தார்கள். ஆர்யரிடம் கிறிஸ்தவர்க்குண்டாகும் த்வேஷம் ஹிம்ஸாரூபமாகப் பரிணமிக்கவில்லை. ஆனாலும் அதனுடைய பரிணாம ப்ரகாரங்களில் தர்மவிருத்தமான அம்சங்களும் உண்டு.

மதஸம்பந்தமற்ற வ்யாபாரங்களில், தத்காலம், மஹம்மதியர்களில் பெரும்பான்மையோரும், இந்திய கிறிஸ்தவர்களில் பலரும் ஆர்ய ஜாதியார்களோடு ஒற்றுமையாக ப்ரவர்த்திக்கின்றார்

கள். சென்னை ராஜதானியில் ப்ராஹ்மணரல்லாதவர்களும் ஜாதியால் உயர்ந்தவர்களுமான சில ஹிந்துக்கள், ப்ராஹ்மணத்வேஷத்தில் நிலைத்துவிட்டார்கள். இருபது இருபத்தைந்து வருஷங்களாக அவர்கள், ப்ராஹ்மணர்கள் அதிகமாக உத்யோகங்களைப் பெற்றார்களென்று அஸூயைப்பட ஆரம்பித்தனர். சென்ற வருஷம் சட்டநிரூபண ஸபா ப்ரவேசத்தின் பொருட்டு ப்ரயத்நித்த அப்ராஹ்மணரான சிலர் ப்ராஹ்மணர்கள் அதிக அபிப்ராயங்களை (Votes) ப் பெற்றபடியால், அந்த ஸபா ப்ரவேசம் தமக்கு அற்றதென்று அதிக்ரூரமாக ப்ராஹ்மண த்வேஷம் செய்யத்தொடங்கினார்கள். அபிப்ராயம் தந்தவர்களில் அதிகமானவர்கள் ப்ராஹ்மணரல்லாதவர்களே. ஆனால் த்வேஷம் ஜநிக்கும் காலத்தில் யுக்தா யுக்த விசார ஸாமர்த்யம் போகின்றது. ஒருவன் ஒன்றை இச்சிக்கும்போது, இச்சிக்கப்பட்ட வஸ்து அந்யனைப் போய்ச் சேர்ந்ததாகில், அந்யனிடம் க்ரோதம் பாராட்டுகின்றான். கீதாசார்யன் அருளிச் செய்தபடியே, விஷயத்தைச் சிந்திப்பவனுக்கு அதில் பற்று உண்டாகின்றது; பற்றால் காமம், காமத்தால் க்ரோதம், க்ரோதத்தால் மோஹம், மோஹத்தால் ஜ்ஞாபகத்தை இழத்தல், அதனால் புத்தியின் அழிவு, இவ்விதமாக அநர்த்தங்கள் பெருகி, முடிவில் புத்தி நாசத்தால் ஸ்வயம் நாசத்தை அடைகின்றான். ஆதலால் விப்ரத்வேஷிகளிடம் மேல் விவரித்த க்ரமங்கள் யாவும் ப்ரகாசிக்கின்றன.

த்வேஷகாரணமின்றி, த்வேஷம் ஜநிக்காமல், விஷயவிவேசநம் செய்ய ஸமர்த்தரானவர்கள் விப்ரத்வேஷம் செய்யமாட்டார்கள். டாக்டர் ஆநந்த குமாரஸ்வாமி யென்பவர் ஸமீபத்தில் எழுதின பௌத்த ஸமய விவரண க்ரந்தத்தில், பின்வருகின்ற மாதிரி எழுதியிருக்கின்றதாகத் தெரியவருகிறது : "ப்ராஹ்மணர் ஜ்ஞாநத்தாலும், ஆத்மகுணபூர்த்தியாலும் ஏற்றத்தைப் பாராட்டினார்கள் என்பது விசதமாயிருக்கின்றது. இந்தியாவில் ஜந்ம ப்ராஹ்மணராய் இருந்தவர்கள் தங்களுடைய ஸீலத்தாலும் ஜ்ஞாநத்தாலும் ப்ராயேண எப்போதும் பகுமாநார்ஹர்களாய் இருந்தார்களென்பதை இந்திய சரித்ரம் அறிந்த ஒருவனும் ஸம்சயிக்கமாட்டான். ஜந்ம ப்ராஹ்மணனிடம் ப்ராஹ்மண்யத்தை நிஷ்கர்ஷிக்கும் வழியைப் பற்றிக் கௌதமர் செய்த ப்ரகாரம் ஆக்ஷேபிப்பது

ஸுலபம். ஆனால் யோசிக்கக்கூடிய வழிகளில், இதுதான் அநுபவத்தை அதிகமாக ஒத்த வழி. லோகத்தார் தம்முடைய வ்யாபாரங்களில் ஜ்ஞாதாக்களுடைய ஸஹாயத்தை அடைவதற்காக இதைக் காட்டிலும் உத்க்ருஷ்டமான மார்க்கத்தை இன்னும் கண்டுபிடித்தார்களில்லை." இன்னும் அவருடைய அபிப்ராயங்களை விவரிக்கின்றோம்:— விசேஷ ஜ்ஞாநங்களை, ஆசார்ய சிஷ்யக்ரமத்தில், அந்த ஜ்ஞாநத்துக்கு அதிகாரிகளாகத் தெரிகின்றவர்களுக்கே உபதேசிப்பதென்பது ப்ராஹ்மண ஸம்ப்ரதாய வ்யவஸ்தையாயிருக்கின்றது. ஆத்மஸம்பந்தமான ஜ்ஞாநத்தை கௌதமர் அறியவில்லை. அவர் காலத்தில் அது குப்தமாயிருந்தது; சிலர்தான் அதை அறிந்தனர். கௌதமருடைய உபதேசங்களோ பஹிரங்கமாகச் செய்யப்பட்டன. அவரை ஸாமாந்ய புருஷர்களும் ஸத்ரீகளும் நெருங்கினார்கள். ப்ரபஞ்சத்தைச் செம்மைப்படுத்துவதென்பது அஸாத்யமென்பதைக் கௌதமரும் ப்ராஹ்மணர்களும் அறிந்தவர்களே. அது ஒரு விதமாக வாஸ்தவமான விஷயம். ஆனாலும், லோக மர்யாதைகளை ரக்ஷிப்பதின் முக்யமான ப்ரயோஜநத்தை ப்ராஹ்மணர் கண்டார்கள்; அஜ்ஞாநம் படிப்படியாக விலகுவதற்கு அவற்றை ஒரு பள்ளிக்கூடமாக நினைத்தார்கள்; ஜநங்கள் நிருபத்ரவமாய் ஸர்வஸுகங்களோடு வாழ்வதெனும் ஸ்திதியானது கால க்ரமத்தில் உண்டாக வேண்டுமென்று அவர்கள்தான் முயன்றார்கள்; அம்மாதிரியான காலத்தின் பூர்வபாவத்தை வால்மீகி வ்யாஸர் மநு முதலானவர்களுடைய க்ரந்தங்களில் யோசித்தார்கள். ஒரு பௌத்த மதஸ்தன் இப்படிப்பட்ட க்ருதயுகத்தை லோகத்தில் ஸ்தாபிக்க முடியாதென்று சொன்னால் ஜ்ஞாதாவான ப்ராஹ்மணன், தன்னுடைய ப்ரயத்நம் ஸித்தித்தாலும் ஸித்திக்காவிட்டாலும், அந்த ப்ரயத்நமேதான் வேண்டிய பலமென்று சொல்வான்.

ப்ராஹ்மணர் ஜ்ஞாநத்தைப் பிறர்க்கு அளித்தாரில்லை யென்பது வேதத்தின் கர்மகாண்டத்தை மாத்ரம் பொறுத்தது. உபநிஷத், இதிஹாஸபுராண விஷயங்களில் யாதொரு ஆக்ஷேபனையும் செய்யப்படவில்லை. ஸ்த்ரீகள் உள்பட எல்லா இந்திய ஜநங்களுடையவும் வித்யாப்யாஸத்தை ப்ராஹ்மணர்கள் புத்திபூர்வமாக ஏற்றுக்கொண்டு ஸாதித்தார்களென்றும், அவ்வித்யாப்ரசாரமானது, ஸர்வத்ர எழுதல் படித்தல் என்பது இல்லாவிட்டா

லும், ஶீலத்தாலும், பரஸ்பர ஸுஹ்ருதத்வத்தாலும் (Character and Courtesy) லோகஜநங்கள் யாவர்க்குள்ளும் இந்திய ஜநங்களை உத்க்ருஷ்டர்களாகப் பண்ணியதெனும், ப்ராஹ்மணர்க்குள்ள யஶஸ்ஸை ஒப்புக்கொள்ளவேண்டியது.

இப்படி யெல்லாம் டாக்டர் ஆநந்த குமாரஸ்வாமி எனும் பண்டிதர் யோசிக்கின்றார். இதற்கு அத்யந்தம் விபரீதமாக அங் யர்களும் யோசிக்கின்றார்கள்.

ப்ரபஞ்ச தத்வதர்சிகள், "ப்ராஹ்மணன் கர்மார்ஜிதமான லோகங்களைப் பரீக்ஷித்து நிர்வேத மடையத்தக்கவன்: கர்மத் தால் உத்பந்நமாகாத பரப்ரஹ்மம் கர்மஸாத்யமன்று" என்றும், "இந்த ஸர்வமும் அதை ஆத்மாவாக உடையது; அது ஸத்யம், அவர் ஆத்மா, அவரே நீ, அதாவது அவர் உனக்கும் ஆத்மா" என்றும், "இந்தச் சரீரம் மரணத்தைத் தர்மமாயுடையது; இன் னும் அது ம்ருத்யுவால் வ்யாப்தம்; அது இந்த அம்ருதனும் அசரீரியாயும் இருக்கின்ற ஆத்மாவினுடைய போகஸ்தாநம்." என்றும், "போக்ய மெனும் ப்ரமைக்கு விஷயமான ஜகத்தை த்யாகம் செய்து, தேஹதாரண மாத்ரத்துக்கு உபயோகமாயும் பகவதாராதநத்துக்கு அநுகூலமாயும் இருக்கப்பட்ட போக்ய வர் க்கங்களை அங்கீகரிக்கவும்" என்றும், இன்னும் பல வகையாகவும், ஶ்ருதி ப்ரமாணங்களைக் காட்டித், தத்வங்களின் ஸ்வரூபங்களைப் போதித்து, அநதிகாரிகள் ஜ்ஞாநமார்க்கத்தில் புகுந்து கெடாம லிருக்கவேண்டி அவர்களை கர்மமார்க்கங்களில் இருக்கச்செய்து, அவர்கள் க்ரமேண ஸ்வகர்மங்களைப் பகவானுடைய ஆஜ்ஞையை முன்னிட்டுப் பகவதாராதந ரூபமாகச் செய்யும்படி ஶாஸ்த்ர முறைகளை உபதேசித்தார்கள். நாம் சரித்ரத்தை அறிந்தமட்டில் இந்தியர்கள் யாவரும் ஸந்யாஸிகளாகப் போந்தாரில்லை. க்ஷத்ரி யர் க்ஷத்ரிய வ்ருத்தியைப் பரிபாலித்தார்கள். வைஶ்யர் எனப் பட்ட பெரும்பாலோர் பொருள்சேர்க்கும் தொழிலை விட்டார் களில்லை. அர்த்தகாமங்களையே ப்ராயிகமாக யாவத்ஜநங்களும் தேடுகின்றார்கள். பெரியோர் அவர்களுக்கு அறிவித்த தென் னென்றால், தர்மமார்க்கங்களிலும் தர்மார்த்தமாகவும் அவற்றைத் தேடவேண்டு மென்பதே. த்யாகத்தின் பொருட்டு அர்த்தங்களை ஆர்ஜித்தார்களென்றும், ப்ரஜார்த்தம் க்ருஹஸ்தர் களாயினார்க ளென்றும், பால்யத்தில் வித்யாப்யாஸம் பண்ணினார்களென்றும்,

யௌவநத்தில் விஷயபோகங்களை இச்சித்தார்களென்றும் ரகு குல ராஜர்களைப்பற்றிக் காளிதாஸ மஹாகவி சொன்னார்.

நமது தேசமும் நாமும் பல நூற்றாண்டுகளாக ஸந்யாஸமெனும் கடலில் மூழ்கிக்கடந்தோமென்றும், அர்த்தாசையையும், அஹங்கார மமகாரங்களையும் கொண்ட ஆசார்யர்களால் ஆளப்பட்டோமென்றும், நமக்கு நிவ்ருத்திதர்மத்தை உபதேசித்து, அவர்கள் ஸ்வயம் வித்தார்ஜநத்தைத் தந்த்ரமாக அவலம்பித்தாரென்றும், ரவீந்த்ரநாதர் ஒரு க்ரந்தம் எழுதியிருக்கின்றாராம். மித்யாபவாதம் இதற்கு மேற்பட்டு உலகத்தில் இல்லை. "வாஸாம் ஸாயூஜ்யஂஹீ ஸ்ரஜு தொ நா ஜநீ" என்பது ஸரியான வசநம்.

ரவீந்த்ரநாதர் உபதேசமோ இவ்வண்ணம் ஏற்படுகின்றது:- காமக்ரோதங்கள், வீர்யம், பலம், இவற்றை விடக்கூடாது. ஹேயமான ஆசைகளை உள்ளடக்க வேண்டும். பூர்வாநுபவம், ஸங்கேதம் முதலியவற்றை த்யாகம்செய்து லோகத்தில் ப்ரவேசிக்க வேண்டும். லோகத்தில் எல்லாம் விகாரத்துடன் கூடியது; எல்லாம் ப்ராணமயம்; எல்லாம் சலநாத்மகம்; நாமும் அவற்றோடு சலித்துக்கொண்டு ஸஞ்சரிக்க வேண்டும்; பாடவேண்டும்; ஆடவேண்டும். இதுதான் நிவ்ருத்தி தர்மம். இதை அவலம்பிக்கின்றவனுக்கு ஶாந்திவேண்டாம்; அவன் ஸதா வ்யவஸாயபரனாக வேண்டும்; ஓடவேண்டும்; சண்டை செய்யவேண்டும். ஶாஶ்வதமாயும் ஸ்திரமாயுமிருப்பதை அவன் தேடவேண்டாம். ப்ராணிக்கின்ற யாவும் ஸததம் மாறிக்கொண்டு, மரித்து மரித்துப் புதிது புதிதாகிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் வைராக்யத்தைத் துறந்து வேலைசெய்வோம்; ப்ராணிக்க இச்சிக்கின்றோம்; ஆதலால் வேலை செய்வோம். துன்பத்தை ஒப்புக்கொண்டு அதைப் போக்குவோம். "கடவுள் செய்தபடியே உலகமெல்லாம் அழகாயிருக்கின்றது. அதை அறிவதுதான் அன்பு. (Love) அன்புதான் கடமை (Duty)" என்று ப்ரௌனிங்க் கவி சொன்னார்.

இவ்வுபதேசத்தைக் கொள்பவர் ஸம்ஸாரத்தில் நிலைப்பார்கள். ஸர்வத்ர ஆத்மதர்சநம் உத்தாரகமானாலும், ப்ரஹ்ம தர்சநமற்ற பேததர்சநம் தான் ஸம்ஸாரமெனப் பெரியோர் சொன்னார்கள். ஆத்மதர்சநம் ஸர்வத்ர ஹித ப்ரவ்ருத்திக்கு மூலம். அந்ய

தர்சநம் விஷபத்யாநத்தில் முடியும். ஒருகாலம் அழகென ப்ரமிப்பதையும், மற்றொரு காலம் மறைவற்ற க்ரௌர்யத்தையும் லோகத்தில் அநுபவிக்கின்றோம். ப்ளேக், காலரா, அம்மை முதலான வ்யாதிகளால் ஸமகாலத்தில் பகு ஜநங்கள் சாவது அழகாமோ? ஸமுத்ரம் திடீரென்று பொங்கிவந்து பட்டணங்களும் நாடுகளும் அழிந்து ஜநங்கள் சாவது அழகாமோ? பூகம்பங்களாலும் எரிமலைகளாலும் ஸமகால மரணம் பகு ஜநங்கட்கு நேர்வது அழகாமோ? ஸமுத்ரத்தில் கப்பல்கள் உடைந்தும் உடைபட்டும் பகு ஜநங்கள் முழுகிச்சாவது அழகாமோ? ஜநங்கள் நிறைந்த கட்டிடங்கள் தீப்பற்றப்பட்டு ஜநங்கள் கோரமரணம் அடைவது அழகாமோ? நதிகள் அமிதமாக ப்ரவஹித்து க்ராமங்கள் அழிந்து ப்ரஜைகள் க்ஷயிப்பது அழகாமோ? பஞ்சங்களில் பசியால் வருந்தி ஏழை ஜநங்கள் மிகுதியாகச் சாவது அழகாமோ? ஜங்கிஸ்கான், டைமூர்லேம், நாதர்ஷா, இவர்கள் போன்ற ம்ருத்யுக்கள் வேடிக்கையாக லக்ஷக்கணக்குகளில் ஜநங்களை வெட்டிக்கொன்றது அழகாமோ? இப்போது நடக்கும் ஐரோப்ய யுத்தம் அழகோ? பக்ஷிகளையும் ம்ருகங்களையும் வேட்டையிலும், உண்டிக்காகவும் கொல்வது அழகோ? ஜீவஜெந்துக்கள் ஒன்றையொன்று கொன்று தின்பது அழகோ? சிறு குழந்தைகள் கணக்கின்றிக் குழந்தைகளாயிருக்கையிலேயே அகால மரணத்தை அடைதல் அழகோ? இவ்வண்ணம் கணக்கிடக்கூடாத துன்பங்களை எல்லாம் நினைத்தால் உலகெங்கும் அழகைக் காண்பது?

லோகத்தில் ப்ரக்ருதியின் குணங்களால் உண்டாகும் கேடுகளை மநுஷ்யர் ஸ்வபுத்தியைக்கொண்டு ஶமநம் செய்கின்றனர். ஆகிலும் ஆத்யந்திகமாய் அவற்றைப் போக்க அவர்கள் அசக்தர். அநேகமாக ப்ரஜைகள் கஷ்டத்தால் ஜீவிக்கின்றனர். தாய்க்குக் கஷ்டமின்றி ஒருவனும் பிறப்பதில்லை. கஷ்டப்படாமல் ஒருவனும் இறப்பதில்லை. துன்பம் மிகுந்த உலகத்தில் துன்பத்தைப் போக்க ப்ரயத்நப்படுவது ஸஹஜம். சிலர் பூதஸுஹ்ருத்துக்களாய் ஜநங்கள் ஸுகிக்கும்படிப் பரோபகாரம் செய்கின்றார்கள். இவர்கள் புண்யக்ருத்துக்கள். இவை யாவும் அல்பமும் அஸ்திரமுமான வ்யவஹாரங்கள். அவற்றின் ப்ரயோஜநங்களும் அப்படிப்பட்டவையே. ஶாஶ்வதமான மஹத்வம் அவற்றால் கிடைக்கமாட்டா.

இந்தியாதேசம் செல்வத்திலும் ஸுகத்திலும் பெருத்திருந்தபடியால் தேசாந்தர ஜநங்கள் அவற்றைக் கொள்ளையடிக்க அந்தத் தேசத்தைப் பலதரம் படையெடுத்தார்கள். செல்வமும் ஸுகமும் ஸர்வஜநங்களும் வைராக்யாநுஷ்டாநம் செய்து பெருகமாட்டா. நிவ்ருத்தி தர்மத்தை ஒருவரும் அநுஷ்டிக்கப்படாதென்பது ரவீந்த்ரநாதர் கருத்தோ? யாராவது அநுஷ்டித்தால் தூஷிக்கவேண்டியதே அவர் தொழிலோ? "ஆயிரத்திலொருவன் ஸித்தியின் பொருட்டு யத்தநிக்கின்றான். யத்தநிக்கின்றவர்களிலும் யாரோ ஒருவன் தான் எனைத் தத்வமாக அறிகின்றான்" எனும் கீதாவசநத்தையும் அவர் மறந்தாரோ?

ப்ராஹ்மணர்களில் இன்னும் ஸாதுக்கள் விளங்குகின்றார்கள். '𑌶𑌮𑍋 𑌦𑌮𑌸𑍍𑌤𑌪𑌃 𑌶𑍌𑌚𑌂 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍇𑌵 𑌚 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍' எனும் கீதாவசநம் உள்ளதைத்தான் சொல்லுகின்றது. வேரற்ற மதமொன்றை உண்டுபண்ணிக்கொண்டு, பூர்வமதத்தைத் துறந்தவர்களுக்குப் பூர்வமத த்வேஷம் ஸ்வபாவமாக உண்டாகலாம். விவேசந ஸாமர்த்யம் இருந்தும் இந்த விஷயத்தில் அது பலிக்கவில்லையென்று தோன்றுகின்றது. காலாநுகுணமாக ப்ரஹ்ம த்வேஷம் பலபெயர்க்குப் பலரூபமாகப் பரிணமிக்கின்றது. நமது நாட்டில் அதற்கு ஜன்ம பூமி ஆண்டர்ஸன்ஹால் எனப்பட்ட ஸ்தாநம். ஆசாரசீர்திருத்தமென்று சொல்லிக்கொண்டு ஸர்வாசார நாசத்தைக் கருதியபேர்கள் அங்கே மதிப்ரம்சம் அடைந்த பிள்ளைகட்கு அஹிதோபதேசம் செய்வது வழக்கமாயிருந்தது. விவேசந ஶக்தியுள்ளவர்களும் தாடஸ்த்யத்தை இழப்பது பகவானுடைய கலிகோலாஹலக்ரீடையோ? எங்காகிலும் த்வேஷத்தைப் பரிபாலிப்பவன் பகவானுடைய அதோநயந ஸங்கல்பத்துக்குத் தக்க விஷயமாவான் என்பதற்கு ஸந்தேஹமில்லை.

ஸ்ரீ:.

ஆர்யர் பூர்வ சரித்ர சிந்தனை.*

அளவுக்குள் அடங்கின கால தேச வஸ்துக்களைப்பற்றி யோசிக்கத்தான் நாம் அதிகாரிகள். அப்படிப்பட்ட நாம் உபாஸிக்கத் தகுந்த ஆகாரங்களைப் பரமகாருணிகனான பகவான் நம்மை அநுக்ரஹிக்கும்பொருட்டு ஏற்றுக்கொள்கின்றான். ச்ருதிகளில் ஸ்ருஷ்டி ப்ரஸ்தாபமானது, நமது பூமியைப்பற்றியோ, நாமிருக்கும் ஸூர்ய மண்டலத்தைப்பற்றியோ, அதனுடன் ஸம்பந்தப்பட்ட தேச விசேஷங்களைப்பற்றியோ, நமக்குப் புலப்படுகின்ற ப்ரஹ்மாண்டமெனப்பட்ட ப்ரபஞ்சத்தைப்பற்றியோ ஏற்பட்டிருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஸ்ருஷ்டியினுடைய ப்ரஸ்தாபமும் பதார்த்த சாஸ்த்ர விமர்சையின் பொருட்டன்று. ஸர்வ ஜகத்துக்கும் உபாதாந நிமித்த காரணமானவன் ஸர்வேச்வரனென்றும், அவன் ஸ்வபாவத்தால் ஸர்வத்துக்கும் ஆதார பூதனென்றும், ஸ்ருஷ்டியின் பிறகு ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு பதார்த்தத்துக்குள்ளும் ப்ரவிஷ்டனாய் அவற்றின் நியந்தாவா யிருக்கின்றானென்றும், தத்வஸ்வரூபமறிந்தவர்கள் ஸர்வேச்வரனை விலக்கி ஒரு வஸ்துக்காவது ஸத்தையை ஒப்புக் கொள்ளமாட்டரென்றும், காரணனாகவும் அந்தர்யாமியாகவும் இருக்கும் அவன் ஸர்வத்ர தர்சிக்கத்தக்கவனென்றும், ஆதலால் ஒவ்வொருவனும் ஸர்வத்ர ஸ்நேஹத்தைப் பாராட்டி இஷ்டப்படி, இஷ்டப்பட்ட விக்ரஹ விசேஷங்களில் உபாஸநார்த்தம் பகவத் தர்சநம் செய்யப் பொருந்து மென்றும், உபதேச ஸ்திரீகரணார்த்தம் ஸ்ருஷ்டிப்ரகரணங்கள் ச்ருதியில் அந்தர்க்கதங்கள்.

ஆனால் ஸ்ருஷ்டி ப்ரகாரமானது ஆதுநிக பதார்த்த சாஸ்த்ரஜ்ஞர்கள் நிச்சயிக்கிறபடியே Evolution எனப்பட்ட பரிணாம க்ரமத்தில் விஸ்தரித்த தென்பதை உபநிஷத் காட்டுகின்றது. அஸத்தினின்று ஸத் உண்டாகுமெனும் பக்ஷத்தை அது ஆதரி

---

* இது சென்ற மாஸம் 'பூமியின் பூர்வாவஸ்தை' என்று எழுதிய விஷயத்தைத் தொடர்ந்து எழுதப்பட்டது.

க்கவில்லை. அது கிறிஸ்தவர் பக்ஷம். நம்மவருள் ஈச்வரனை உபாதாந நிமித்த காரணமாக அங்கீகரிப்பவர்களும், கேவலம் நிமித்த காரணனெனச் சொல்பவர்களும் ஸத்கார்யவாதிகளே. முடிவான காரணமெனப்பட்ட தமஸ் எனும் மூல ப்ரக்ருதியானது ப்ரளய காலத்தில் பரமாத்மாவினிடம் ஏகீ பாவத்தை அடைகின்றதென ஸுபாலோபநிஷத் வெளியிடுகின்றது. ‘தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ் ஸம்பூத:’ என்று சொல்லும் தைத்திரீய ச்ருதியின் தாத்பர்யமும், ஸ்ருஷ்டிக்கு முன்பு அதிஸூக்ஷ்மாவஸ்தையைப் பொருந்தின ப்ரக்ருதியானது ஈச்வரனிடம் லயித்திருந்து, ஆகாசமெனப்பட்ட விகாராவஸ்தையுடன் ஈச்வரனைக் காட்டிலும் வேறாக ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட தசையில் ஆவிர்பவித்ததென்பதே. ஸத்சப்தவாச்யனான பரமாத்மா ஸ்வஸங்கல்பத்தால் தேஜஸ்ஸை ஸ்ருஷ்டித்தானென்றும், தேஜஸ்ஸைச் சரீரமாகவுடைய அவனே தன் ஸங்கல்பத்தால் அப் எனும் ஜலத்தை ஸ்ருஷ்டித்தானென்றும், அப் சரீரகனான அவனே ஸங்கல்ப பூர்வகம் அந்ந மெனும் ப்ருதிவியை ஸ்ருஷ்டித்தா னென்றும், காட்டுகிற சாந்தோக்யச்ருதி ப்ரக்ருதி முதல் ஆகாசம் முதலான ஸர்வ மஹா பூதங்களைக் குறிக்கின்ற சப்தங்களும் தத்தத் சரீரகனான பரமாத்மாவையே சொல்லுகின்றன வென்று தெரிவிக்கின்றது. மநுஸ்ம்ருதியும் ஸ்வசரீரத்தினின்று பகவான் லோக ஸ்ருஷ்டியைச் செய்தானென்றும் உண்மையை போதிப்பிக்கின்றது. ஆதலால் ஸர்வகாரண காரணனான நாராயணனைப்பற்றிய ஜ்ஞாநத்தால், ஸர்வ கார்ய வஸ்துக்களும் ஜ்ஞாதமாகின்றன; ஸர்வ வஸ்துக்களிலும் அவன் ஸமனாக நிற்கின்ற ஜ்ஞாநம், ஒவ்வொருவர்க்கும் சரீர ஸம்பந்தத்தால் வருகின்ற அஹங்கார மமகாரங்களைப் போக்குகின்றது; அவித்யா நிவ்ருத்தியும், ஸர்வத்ர ஆத்ம தர்சநமும், சரீராவஸாநத்தில் ப்ரஹ்ம ப்ராப்தியைத் தருகின்றன. இத்தகைய உபதேசத்தை உத்தேசித்தே ச்ருதியானது ஸ்ருஷ்டி க்ரமத்தை ஈஷத் சிந்தித்தது.

ஸ்ருஷ்டங்களான பல லோகங்களுள் ஒன்றான நமது பூமியும், முதலில் அக்நி மயமாய், த்ரவீபூதமாய், ஒரு கோளாகாரத்தைப் பொருந்தி, ஸூர்யனை ப்ரதக்ஷிணம் செய்துகொண்டு, ஸூர்யனுடன்கூடி இந்த ப்ரபஞ்சத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிரு

க்கையில், க்ரமேண அதனுடைய மேல் பாகங்கள் விளாங்காயி னுடைய ஓட்டைப்போல் கடீபூதங்களாய், ப்ராணிகளுக்கு வாஸ யோக்யமாகப் பரிணமித்தனவென்று, பதார்த்த சாஸ்த்ரமறிந் தவர்கள் உரைப்பார்கள். இந்த அவஸ்தை ப்ருத்விக்கு உண்டாக எத்தனையோ கோடி வருஷங்கள் கழிந்திருக்க வேண்டும். இவ் வண்ணம் கநத்துப்போன பூமியின் அம்சங்களில் சில காற்றாயும், சில ஜலமாகவும் மாறி ப்ராணிகள் ஜீவிக்க உதவுகின்றன. பிறகு ஸ்தாவரம் முதல் மநுஷ்யன் வரையில் ஜந்துக்கள் உண்டானார் கள். இந்தப் பரிணாம விசேஷங்களை உத்தேசித்து, 'ப்ருதிவ்யா ஓஷதய:, ஓஷதீப்யோந்நம், அந்நாத் புருஷ:' என்று ச்ருதி மொழிந்தது. இன்னும் அந்நசப்தவிவரணமாக, 'அத்ய தேத்தி ச பூதாநி, தஸ்மாதந்நம் ததுச்யத இதி' என்றும் ச்ருதி சொல்லிற்று. ப்ராணிகளுக்கு ஆகாரமாவதும், ப்ராணிகளைப் புஜிப்பதும் அந்நமெனப்படுகின்றன. ஓஷதிகளினின்று அந்நம் உண்டானதாகச் சொல்லப்பட்டபடியாலும், ப்ராணிகளால் சாப் பிடப்பட்டும் ப்ராணிகளைச் சாப்பிட்டுக்கொண்டுமிருக்கின்ற புழு, பூச்சி, பக்ஷி, ம்ருகம் முதலான ஜந்துக்கள் அந்நமெனப்படுகின் றன. அந்நத்தினின்று புருஷன் உண்டானானென்று சொல்லப் பட்டபடியால், ம்ருக ஜாதிகளினின்று புருஷன் பரிணமித்தான் எனவும், ஓஷதிகளையும் பக்ஷி ம்ருகங்களையும் புஜித்துப் புருஷன் வ்ருத்தி யடைந்தான் எனவும் சொல்லலாம். ஆனால் ச்ருதி பரி ணாம க்ரமத்தைத்தான் உத்தேசித்ததென்று தோன்றுகிறது.

பூமியில் புருஷன் உண்டான காலத்தின் அளவைப்பற்றிப் பதார்த்த சாஸ்த்ர வித்துக்களும் புராணங்களைப்போல் யோசிக் கின்றனர். அக்காலம் கணக்கிட்டுச் சொல்லத்தக்கதல்ல. ஆனால் சரித்ர கால மென்பதைச் சென்ற பத்துப் பன்னிரண்டு ஸஹஸ்ர ஸம்வத்ரங்களுக்குள் அடக்கிவிடுகின்றார்கள். நம்முடைய தேச சரித்ர காலத்தை மிகவும் ஸங்க்ரஹித்துவிடுகின்றார்கள். 3500 அல்லது 4000 வருஷங்களுக்கு முன் ஆர்யா வர்த்தத்தின் வடமே ற்குத் திக்கிலிருந்து ஆர்யர் எனப்பட்ட ஒரு ஜாதி ஜனங்கள் ஆர்யா வர்த்தத்தில் ப்ரவேசித்துக் குடிகொண்டார்களென்றும், அக்கா

லத்தின் பிறகுதான் வேத மந்த்ரங்கள் அவர்களால் பண்ணப்பட்டதாகவும் சில ஐரோப்யர்கள் அநுமிக்கின்றார்கள். இந்த அநுமானத்தை நம்மவர்களுக்குள் சரித்ர விமர்சிகளெனத்தக்க பலர் ஆக்ஷேபிக்கின்றனர்.

Post-glacial period எனப்பட்ட ஹிமபச்சாத் காலத்தின் முன், Glacial period எனும் ஹிமாவ்ருத காலத்தில், பூமியின் உத்தர பாகங்களெனத்தக்க த்ருவப்ரதேசங்கள், பனிக்கட்டிகளால் மூடப்பட்டுப் போயினவென்று முன்னமே சொன்னோம். அதற்கு முன்பாக, அதே பூப்ரதேசத்தில், ஹிமாவரண காலங்கட்கு இடையே Inter-glacial periods எனும் ஹிமமத்ய காலங்கள் இரண்டோ, மூன்றோ, நான்கோ, இன்னும் அதிகமாகவோ இருந்தனவென்று பதார்த்த சாஸ்த்ரவிமர்ஸிகள் சொல்கின்றார்கள். அப்படிப்பட்ட மத்ய காலங்களில் த்ருவ ஸமீப ப்ரதேசங்கள் மநுஷ்யர்க்கு ஸுக வாஸார்ஹமாய் இருந்தன வென்பதையும் சொன்னோம். அப்படி வஸித்தவர்க்குள் அடங்கினவர்கள் பூர்வமந்வந்தரவாஸிகளான நம் முன்னோர்கள் என்று யோசிக்கத்தக்கதாயிருக்கின்றது. ஸ்வாயம்புவ ஸம்வரண ஸாவர்ணி முதலான பூர்வ மநுக்களைப்பற்றி வேதங்களில் ப்ரஸ்தாபம் உண்டென்று போன ஸம்வத்ஸரம் கார்த்திகை மாஸம் தீபிகையில் வெளியிட்டோம். ஸ்வாயம்புவமநுவம்சயனை த்ருவனுக்கு, 'ஸவேஷாம் உபரி ஸ்தானம் தவ திஷ்டத்யயோ த்ருவ' என்று பகவான் அநுக்ரஹித்த த்ருவ பதம் ஸர்வக்ரஹ நக்ஷத்ராதிகளுக்கும் மேற்பட்டதாய்க் காணப்படக்கூடியது, த்ருவ ப்ரதேசத்திலென்று சொல்லவேண்டியதில்லை. ஆதலால் அந்த உபாக்யானமானது பூர்வ மநுக்கள் த்ருவ ப்ரதேசவாஸிகளென்று காட்டுகின்றது. இந்த விதமாக, சிந்திக்கவொண்ணாத அதிபூர்வ காலங்களில், நம் முன்னோர்களுடைய இருப்பை நமது மஹர்ஷிகள் நமக்களித்த பூர்வ க்ரந்தங்கள் வெளியிடுகின்றன. ஸ்மரணத்தால் அவர்கள் ப்ராசீந வ்ருத்தாந்தங்களைக் காப்பாற்றி வைத்து முடிவாக ஓலையில் இட்டார்கள். அப்படிப்பட்ட க்ரந்தங்களை அடியோடு தள்ளிவிடுகின்றவன் இந்த லோகத்தினுடைய ஆதிகால வ்ருத்தாந்தத்தை வேண்டாதவனென்றே கொள்ளவேண்டும். வேத பாகங்களில் அநாதியாக இதிஹாஸ புராணங்கள் இருந்தனவென்று காட்ட அநேக வசநங்கள் உண்டு. •வ்யாஸோக்தங்களான இதிஹாஸ புராணாதிகளில்

அவை யாவும் ரக்ஷிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று யோக்யர்கள் அப்யுபகமம் செய்வார்கள். அந்த இதிஹாஸ புராணங்கள்தான், ப்ரக்ஷிப்த பாகங்களுடன் இப்போது நமக்குக் கிடைத்திருக் கின்றன.

ஐரோப்யர் நமக்கு ஏற்படுத்துகின்ற சரித்திர காலத்தை ஆக்ஷேபிக்கின்றவர்களில் பால கங்காதர திலக் என்று லோகமாந்ய த்வத்தை அடைந்த மஹாராஷ்ட்ர ப்ராஹ்மணரான வித்வான் ஒருவர். அவர் நம்முடைய பூர்வீகர்களும் பார்ஸீ ஜாதியாருடைய முன்னோர்களும் சேர்ந்து, ஹிமாவ்ருத காலமெனப்பட்ட ப்ராசீந காலத்தின் முன்பு ஹிமமத்ய காலத்தில், பூமியில் உத்தர ப்ரதே சங்களில் ஸுகமாக வஸித்தாரென்றும், ஹிமாவ்ருத காலத்தில் பனிக்கட்டிகள் அவர் வஸித்த நாடுகளை மூடிக்கொண்டுவரவே, அங்கே இருக்கமுடியாமல், படிப்படியாக அவர்கள் தக்ஷிணப்ர தேசங்களில் குடிகொண்டாரென்றும், இந்தியாவுக்கு வடமேற் கில் இருக்கும் (தத்காலம் டர்கிஸ்தாநம் என்று பெயர்வழங்கும்) ப்ரதேசத்தில் அவர்கள் ஹிம பச்சாத் காலத்தில் வஸித்தபோது அவர்களுக்குள் உட்பிரிவுகள் உண்டாகி பார்ஸிகள் அஸுரோ பாஸகராக மாறி மேல்புறம் புறப்பட்டுப் போனாரென்றும், நம் பூர்வீகர் தேவோபாஸகராய் இந்தியாவில் ப்ரவேசித்தாரென்றும் அநுமிக்கின்றார்.

இவர்கள் வாஸம்செய்தப்ரதேசம் ஹிமாவ்ருதமாய்ப் போய், இவர்களில் தப்பினவர்கள் ஸ்வரக்ஷணார்த்தமாகத் தென்தேசங்க ளுக்கு ஓடிவந்த விஷயமாகத்தான் ப்ரளய மெனப்பட்ட ஸந்தர்ப் பம் வேதபாகங்களில் யோசிக்கப்பட்டதாகவும் எண்ணப்படுகின் றது. சில பாச்சாத்ய வித்வான்களை அநுஸரித்து திலக் வித்வான் மேற்குறித்த ஹிமபச்சாத் காலத்தினுடைய ஆரம்பம் 10,000 வருஷங்கட்கு முன்னிருக்கலா மென்று ஊகிக்கின்றார். இதர ஐரோப்யர்கள், அது 40,000, 80,000, 2, 3 லக்ஷம் வருஷங்களு க்கு முன்பட்ட தெனவும் சொல்வர்.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

ஸ்ரீ:

குருபரம்பராநுஸந்தாந க்ரமம்.

(தொடர்ச்சி.)

புத்தங்கோட்டகம் ஸ்வாமி, “லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் - அஸ்மதாசார்யபர்யந்தாம் என்று கூரத்தாழ்வான் பகவானை ஆரம்பித்து அருளிச்செய்திருக்கிறார்” என்றும், “தவிரவும் குருபரம்பரையைச் சொல்வதற்காக ஏற்பட்ட குருபரம்பராஸார க்ரந்தத்தில் நாதமுனிகளை ஆரம்பித்து, அவரோஹண க்ரமமாகவே உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த குருபரம்பரை க்ரந்தத்துக்கு ஸங்க்ரஹ ஶ்லோகமான ‘வந்தேஹம்’ என்கிற ஶ்லோகத்தில் ‘நாதாதய:’ என்பதால் நன்கு வ்யக்தமாகிறது” என்றும் எழுதுகிறார்.

குருபரம்பராஸார க்ரந்தத்தில் ஸ்ரீதேசிகன், “ஆசார்யவத்தையே ஸர்வர்க்கும் மோக்ஷகாரணமென்று அறுதியிட்டார்கள்” என்றும், “முமுக்ஷுவுக்கு ஆசார்யவம்ஶம் பகவானளவும் செல்லவநுஸந்திக்கவேணுமென்றோதப்பட்டது” என்றும், மங்களாநுஸந்தாந ப்ரகரணத்தை முடித்துவிட்டு, குருபரம்பரா ப்ரகாஶநார்த்தமாகவும், நமது ஸித்தாந்தார்த்தங்களெல்லாம் ஸத்ஸம்ப்ரதாய ஸமாகதங்களென்று காட்டுவதற்காகவும், ‘அஸாவஸாவிதி’ என்கிற ப்ரமாண ப்ராப்தமான தத்தத் வ்யக்தி விஶேஷ பரிஜ்ஞாநார்த்தமாகவும், குருபரம்பரா ப்ரகரணத்தை அஸாதாரண்யேந ஆரம்பியாநின்றுகொண்டு, அந்தப் பரம்பரையில் ப்ராதமிகனான ஸர்வேஶ்வரனுடைய ஆசார்ய பாவத்தை ‘தஸ்மை நமோ மதுஜிதங்க்ரி

ஷம்' இத்யாதியால் காட்டியருளினர். இந்த ப்ரகரணம் குரு பரம்பரா ப்ரகாஶநார்த்த குருவ்யக்தி பரிஜ்ஞாநார்த்த மென்பது, "இவர் ஸ்ரீபாதத்தில் ஆஶ்ரயித்த முதலிகளைத் தம் தம் ஸம்ப்ர தாயப்படிகளிலே யறிந்து கொள்வது. 'மஹாபாம்வ்ரகாஶயே ஜீவாநு உஜும்யதேந மோவயெக| கவ்ரகாஶ வ்ரகாஶாஹ்ராம் கூநீயெதெ ஸம்வஹாயகஷீ॥' என்கிறார்கள்" என்று தொடங்கி, "ஆகையால் ஸர்வாவஸ்தையிலும் குருபக்தியின் பரீவாஹமாகக் குருவை ப்ரகாஶிப்பிக்கவும், மஹாரத்ந கர்ப்பமான மாணிக்கச் செப்புப்போலே யிருக்கிற திருமந்திரத்தினுடைய சீர்மையும், தன் நிஷ்டையும் குலையாமைக்காகச் சில்வான ப்ரயோஜநங்களைப் பற்ற, ஶிஷ்யகுண பூர்த்தியில்லாத சபலர்க்கு வெளியிடாதே மந்த்ரத்தை மிகவும் சேமிக்கவும் ப்ராப்தம்" என்னுமளவாக வுள்ள உத்தர ப்ரகரணத்தால் ஸுவ்யக்தம். இவ்விடத்தில் விஜெஷ்யக்ஷ்ய நீயெபந பூர்வோதாஹ்ருதங்களான ஆசார்ய க்ருத்யாதிகார ஶிஷ்ய க்ருத் யாதிகார ஸ்ரீ ஸூக்திகளை அநுஸரித்துத் தாத்பர்ய கல்பநம் பண்ண வேண்டியது உசிதமாகையால், முன் விவரித்திருக்கிறபடி குருப்ர காஶநார்த்தமான குருபரம்பரா விவரணத்தில் அவரோஹ க்ர மத்தை ஆதரித்திருப்பது ந்யாய்யமே. ஆகையால், இந்த ப்ரகர ணமும், புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் அபிப்ராயப்படி ஸங்க்ரஹ ஶ்லோகமான 'வஙதெஉஹ்ம்' என்கிற ஶ்லோகத்திலுள்ள 'நா யாஉயஃ' என்பதும், மாவநூந ஸந்தாந ப்ரஸ்தாவத்தில் அவ ரோஹண க்ரமத்திற்கு எப்படி ஸாதகமாகக்கூடும்?

மேலும், இந்த ப்ரகரணமும் முடிந்த பிறகு, "தான் இந்த ரஹஸ்யங்களை அநுஸந்திக்கும்போதெல்லாம் ஆசார்ய பரம்ப ரையை அநுஸந்திக்கையும் விதி பல ப்ராப்தம். இவ்வாசார்யர்களு டைய அநுஸந்தாநம், 'ஸம்ஹாஷ்வ வணக்யோதா உநலாய்யா யெகூ' என்கிறபடியே ப்ரதிஷித்த ஸம்பாஷணத்துக்கு ப்ராயஶ் சித்தமுமாம்" என்று அநுக்ரஹித்துவிட்டு, அவ்வநுஸந்தாந க்ர

மத்தையே 'என்னுயிர் தந்தளித்தவரை' என்னும் பாசுரத்தால் அநுஷ்டாந முகேந ப்ரதர்ஶிப்பித்திருக்கிறபடியால் ஸ்ரீதேசிகனுக்குக் குருபரம்பரானுஸந்தாநத்தில் ஆரோஹ க்ரமமே அபிமதமென்று நிஸ்ஸங்கமாய்ச் சொல்லத் தட்டில்லை. மேலும், குருபரம்பராஸார க்ரந்தாவஸாநத்தில் ஸ்ரீதேசிகன் ஸ்ரீ முநித்ரயத்தைப் பற்றிப் பேசும் பாசுரங்களில் காணும் ஆரோஹ க்ரமமும் ப்ரக்ருதத்தில் விமர்ஶிக்கத்தக்கது.

வ்யக்தி விஶேஷ நிர்த்தேஶ பூர்வக குருபரம்பரானுஸந்தாந ஸ்தலத்தில் மாத்ரமே 'அவராவரா விதாநமவத:' என்னும் வசநம் க்ரம நிர்ணயார்த்தம் ப்ரவர்த்திக்குமாகையால், ஸமுதாய ரூபேண நிர்த்தேஶித்தவிடத்தில் ஔசித்யானுஸாரியான இச்சையே நியாமிகையென்று கொள்ளவேண்டியிருப்பதால், 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்கிற ஸமுதாய நிர்த்தேஶ ஸ்தலத்திலுள்ள க்ரமத்தை எந்தப் பக்ஷத்திற்கும் ஸாதகமாகவோ பாதகமாகவோ ஸ்வீகரிக்க ந்யாயமில்லை. அதனால் 'நாயாதய:' என்பதும் வ்யாக்யாதமாயிற்று. 'மாதா பிதா யுவதய ஸ்தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதன்வயாநாம்' என்னும் ப்ரமாணானுஸாரியான 'மாதா பிதா யுவதய ஸ்தநயா விபூதி:' என்கிற ஶ்லோகத்தில் பஹுவசநாந்தமான 'மாதா பிதா:' என்பதற்குப் பிறகு 'ஸ்தநயா விபூதி:' என்று வாக்யாந்தர நிர்த்தேஶமும் இப்பக்ஷத்தில் ஸ்வரஸத: ஸங்கதமாகின்றது. அதனால் 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்னும் தனியன் வ்யாக்யாநத்தில், "ஆழ்வான் அநுஸந்தாந க்ரமமாயிற்றிது. இவரையொழிந்த மற்றையார் 'அஸ்மதாசார்ய பர்யந்தாம் யதிஶேகர மத்யமாம் - லக்ஷ்மீவல்லப பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்' என்று மாறி அநுஸந்தித்துப் போருவது" என்று எழுதியிருக்கிறார்கள். மேலும், ஸம்ப்ரதாய ஸார்வபௌமரான ஸ்ரீதேசிகனுடைய 'ராமாநுஜ தயாபாத்ரம்' என்னும் தனியனை ப்ரதமத: அநுஸந்தித்து விட்டுப் பிறகு ஸமுதாய நிர்த்தேஶ ரூபமான இந்த 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்கிற தனியனை அநுஸந்தித்து வரும் ஶிஷ்டர்கள், அநந்தரம் ஆரோஹ க்ரமமாக

ரேண 'யோநித்யம்' முதலிய தத்தத் வ்யக்தி விஶேஷங்களின் தனியன்களை [illegible] அநுஸந்தித்து வருகிறார்கள்.

வாத்ஸ்யாஹோபிலாசார்யரும், 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்கிற தனியனை வ்யாக்யாநிக்குமிடத்தில், முதலில், "இங்கு '[illegible]' '[illegible]', [illegible]', '[illegible]', '[illegible]' இத்யாதிகளில்படியே ஆசார்யன் தொடங்கி எம்பெருமானளவும் குருபரம்பராநுஸந்தாநம் பண்ண ப்ராப்தமாயிருக்க, 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்று எம்பெருமான் தொடங்கி ஸ்வாசார்ய பர்யந்தமாக அநுஸந்திக்கும்படி எங்ஙனே யென்னில்: இது ப்ரபித்ஸுக்கள் ப்ரபத்தி பண்ணும் தஶைபோலன்றிக்கே '[illegible]' என்று வித்யா ப்ரபாவம் சொல்லுகிற தஶைபோலே [illegible] யாகையாலே 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்கிற தனியனை இங்கு அநுஸந்திக்கத் தட்டில்லை" என்று சொல்லிவிட்டு, இதில் [illegible] "அன்றிக்கே லக்ஷ்மீநாத ஸமாரம்பமாயும், நாத யாமுநமத்யமமாயும், அஸ்மதாசார்ய பர்யந்தமாயு மிருந்துள்ள குருபரம்பரையை '[illegible]', '[illegible]' இத்யாதிகளில் படியே ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான '[illegible]' இத்யாதி வாக்ய குருபரம்பரையில் சொல்லுகிற க்ரமத்திலே சரணமடைகிறேனென்று அநுஸந்தித்தாராகவுமாம்.

‘ஶாஸ்த்ரஜ்ஞாநம் ப்ரஹுக்லேஶம் புத்தேஶ்சலநகாரணம் । உபதேஶாத்தரிம் புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு’ ... ‘ஸம்ப்ரதாய பரிஶுத்த்யர்த்தம் ... கீர்த்தநீய:’ என்னக்கடவதிறே. ஆக இப்படிகளாலே சொல்லிற்றாய்த் தென்னென்னில்: ‘ப்ரதமம் ப்ரஹ்மா ப்ரஜாபதய உவாச’, ‘தஸ்யாபி தஸ்யாசார்யேண ....’ இத்யாதிப்படியே உபதேஶ தஶையில் எம்பெருமான் தொடங்கி ஸ்வாசார்ய பர்யந்தம் குரு பரம்பரையை வெளியிடவும், ‘அஸ்மத்குருப்ய: ஸம்ப்ரதாய:’ இத்யாதிப்படியே நித்ய ஜபாதி காலங்களில் ஸ்வாசார்யாதியாக எம்பெருமா னளவாகக் குருபரம்பராநுஸந்தாநம் பண்ணவும் ப்ராப்த மென்றதாய்த்து” என்று பக்ஷாந்தரத்தை எழுதியிருக்கிறார்.

“‘ஸ்வாசார்யாணாம் ப்ரணம்ய’, ‘ப்ரதமம் ப்ரஹ்மண:’ என்று பகவானை ஆசார்ய வம்ஶாநுஸந்தாநத்திலே சரமாவதியாக விதிக்கிற ஶ்ருதி ஸ்ம்ருதி க்ரமத்திற்கு விருத்தமாக இவனை முற்படச் சொல்லுவா னென்னென்னில், இது * க்ரந்த ஸங்கதிக்காகச்

* “அந்த ஸங்கதி எங்ஙனே யென்னில்: ஆசார்ய வம்சம் பகவானள வும் செல்ல அநுஸந்திக்க வேணுமென்கிற வாக்யத்தின் மேலே ஸர்வ (ஶ்ருதிஸித்த) ஸாதநம் விருத்தமன்றோ? என்று ஶோதநம் பிறக்கையாலே இத்தைப் பரிஹரித்தல்லது ப்ரதம ப்ரஹ்மாநுஸந்தா நத்திற்கு அவஸரமில்லாமையால், அதற்காகப் பகவானை முற்படச் சொல்ல வேண்டின பின்பு, இனி ஸ்வாசார்யாத்தைவிட்டு க்ரமார்த்தம் ஆரம்பிக்கை அஸங்கதமாகையாலும், உத்தராவதியன்றிக்கே உத்தரோத்தரமாக நடக் கப் புகுகிற ஆசார்ய வம்ஶத்தை இப்போது காண்கிற உத்தராவதியைக் கொண்டு வரையிட்டு க்ரந்தத்திலே நிவேஶிப்பிக்கை அநுசிதமாகையாலும், பூர்வாவதியைத் தொடங்கி ஸகல ஸம்ப்ரதாய ஸாதாரணமான ஶ்ரீபாஷ்ய கார பர்யந்த குரு பங்க்தியை க்ரந்தத்திலே நிவேஶிப்பித்து, மேலுள்ள ஆசார்ய வம்சங்களைத் தம் தாம் ஸம்ப்ரதாயப்படிகளிலே அறிந்துகொள்வ தென்கை உசிதமாகையாலும், இப்படி உத்பத்தி க்ரமத்தை அருளிச்செய் தால் ஶ்ருதி ஸம்ருதிகளின்படியே இதற்கு வ்யுத்க்ரமமாக அநுஸந்தாந க்ரமமென்று அர்த்தாத் ஸித்திக்கையாலும், இப்படி இங்கே பகவதுபக்ரம மாக ஆசார்ய வம்ஶத்தை அருளிச் செய்தார்” என்று ப்ரஹத் குருபரம் பராஸாராஸ்வாதிநீ.

சொன்னதத்தனை போக்கி ஆசார்யவம்ஶாநுஸந்தாநம் இந்த க்ரமத்திலே கர்த்தவ்யம் என்று இங்கு தாத்பர்யமில்லை. அதெங்ஙனே யென்னில்: 'ம௱ஹ்ய:' என்று ப்ரபந்தார்த்தஸம்க்ஷேப ரூபமான உபக்ரம ஸ்லோகத்திலும் 'என்னுயிர்' என்று இப்ரபந்தார்த்தத்திற்கு அநுஷ்டாந பரமான உபஸம்ஹாரப் பாட்டிலும், ஸாம்ப்ரதாயிக ஸர்வ ஸாரார்த்தாநுஶாஸந பரமான ஸ்ரீ ரஹஸ்ய த்ரய ஸாரத்திலும், ஸாரஸங்க்ரஹத்திலும் 'ஶ்ரீமத்வத: ஸ்ருதி தாம்', 'ஸஹத்ம ...' என்னும் இந்த ஸ்ருதி ஸ்ம்ருதி விஹித க்ரமத்தையே அருளிச்செய்கையாலும், மற்றுள்ள ஆசார்யர்களும், '...', 'வம்ஶே...' இத்யாதியாலும் வாக்ய குருபாம்பரையிலும், '...', '...' இத்யாதியிலும் இந்த க்ரமத்தையே அருளிச்செய்கையாலும் இவை இத்தனைக்கும், ...க ஸ்ருதி ஸ்ம்ருதிகளுக்கும் விருத்தமாக இங்கு க்ரமாந்தரத்திலே தாத்பர்யமாகக் கல்பிக்கை அநுபபந்நமிறே. '...' இத்யாதி வசந வ்யக்த ஸ்வாரஸ்யத்தைப் பார்த்தால், குருபங்க்தியினுடைய உத்பத்தி க்ரமமிருக்கும்படியைச் சொல்லுகிறவை அத்தனையிறே. ஆகையால் இங்கும் 'வம்ஶே ... ...' என்கிற இடத்திலே ... விஶேஷ வந்தநம் விவக்ஷிதமென்று கண்டுகொள்வது" என்று ப்ருஹத் குருபரம்பரா ஸாராஸ்வாதிநியில் ஸ்ரீமத் ஸாக்ஷாத் ஸ்வாமி நிஷ்க்ருஷ்டமாய் அருளிச்செய்திருக்கிறார்.

'ஶாஸ்த்ர மூலமல்லாத ஸம்ப்ரதாயமும், ஸம்ப்ரதிபந்ந ஶாஸ்த்ர விருத்தமான ஸம்ப்ரதாயமும் ப்ரமவிப்ரலம்ப ஸம்பாவனை உண்டாகையால் பாஹ்ய துல்யமாகையாலே அவிஶ்வஸநீயம்' என்னும் ஸம்ப்ரதாய பரிஶுத்தி ஸ்ரீஸூக்தியைச் சிந்திப்போர், ஈதருஶ விஷயத்தில் ஸம்ப்ரதாயாந்தர ஸம்வாத ப்ரதர்ஶநம் அகிஞ்சித்கரமென்றே நினைப்பார்கள்.

ஏவம்ச பூர்வோக்த ப்ரமாண ஸ்ரீஸூக்த்யாதிகளைப் பராமர்சித்தால் குருபரம்பராநுஸந்தாநத்தில் ஆரோஹக்ரமம்தான் ஸ்ரீ தேசிகாபிமதமென்று ஏற்படுகிறது.

இத்தம் பரம்பராநுஸந்தாந க்ரமம் தேஶிகஸம்மதம் ।
ஶ்ரீவத்ஸவம்ஶதிலக ஶ்ரீக்ருஷ்ணஸூரி ந்யதர்ஶயத் ॥

ராயம்பேட்டை உருப்பட்டூர்

திருக்குடந்தை,
7—8—17.

சக்ரவர்த்தி. க்ருஷ்ணமாசார்யன்.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

		ரூ.	அ.	பை.
1.	ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்)	0	2	0
2.	ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3.	ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யராற் செய்யபட்ட உபந்யாஸம்)	0	2	0
4.	ஸ்ரீ பாகவத தஶஶ்லோகி - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்)	0	4	0
5.	ஸ்ரீ சதுஶ்ஶ்லோகீ விவரணம்	0	4	0
7.	ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் (ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது	0	4	0
8.	ஆர்யாப்யுதயம். (ஸ்ரீ. உப. டி. இ. சடகோபாசாரியார்	0	2	0
9.	ஸ்ரீ ஹம்ஸ ஸந்தேஶ விமர்ஶம் (ஸ்ரீ. உப. எம். கே. தாதாசாரியார்)	0	3	0

ஸ்ரீ:

ஸ்ரீ தேசிக ப்ரபந்தம் - பதவுரை.

அம்ருதரஞ்ஜநீ.

(தொடர்ச்சி.)

கட்டளைக்கலித்துறை.

சாக்கியர் சைனர்கள் சார்வாகர் சாங்கியர் சைவர்மற்றும்
தார்க்கிய னூல்கள் சிதையத் தனிமறை யின்கருத்தை
வாக்கிய முப்பதி னூல்வகை செய்து வியாகரித்தோம்
தேக்கி மனத்து ளிதனைத் திணியிரு ணீங்குமினே. (உ0)

(இ - ள்.) தனி - ஒப்பற்ற, மறையின் - வேதங்களின், கருத்தை - பொருளை, வாக்கியம் முப்பதினூல் - முப்பது வாக்கியங்களால், வகை செய்து - வகுப்பாகப் பிரித்து, சாக்கியர் - பௌத்தர்கள், சைனர்கள்-சினனைத் தொழுவோர், சார்வாகர்—, சாங்கியர்—, சைவர் - சிவனடியார்கள், மற்றும் - அன்றியும், தார்க்கியன் நூல்கள் - ந்யாய வைசேஷிகர்களுடைய நூல்கள் பலவும், சிதைய - அழியும்படி, வியாகரித்தோம் - வியாக்கியானம் செய்தோம்; இதனை - இந்த அர்த்தங்களை, மனத்துள் - உங்கள் மனதில், தேக்கி - இருத்தி, திணி இருள் - நிறைந்துள்ள அஞ்ஞானத்திலிருந்து, நீங்குமின் - விலகி விடுங்கள். (எ - று.) நீங்கள் - தோன்றா எழுவாய்.

(க - து.) சாக்கியர் முதலான பரமதங்களது நூல்களெல்லாம் அழியும்படி வேதத்தின் பொருளை முப்பது வாக்கியங்களால் சுருக்கிச் சொல்லி அவற்றிற்கு உரையும் செய்து வெளியிட்டோம்; இதைக்கொண்டு உமது அஞ்ஞானத்தை நீக்குவீர் என்கிறார்.

(கு - பு.) தாக்கிய, நீக்குமின் என்றும் பாடமுண்டு. தாக்கிய - எதிர்த்த. (20)

இதுவுமது.

தள்ளத் துணியிலுந் தாய்போ லிரங்குந் தனித்தகவால்
உள்ளத் துறைகின்ற வுத்தமன் றன்மை யுணர்ந்துரைத்தோம்
முள்ளொத்த வாதியர் முன்னே வரிலெங்கள் முக்கியர்பால்
வெள்ளத் திடையி னரிபோல் விழிக்கின்ற வீணர்களே. (உக)

(இ - ள்.) தள்ள - நாம் நீக்கிவிடுதற்கு, துணியிலும் - துணிந்தாலும், தாய் போல் - பெற்றவளைப்போல், இரங்கும் - நம்மீது மனமிரங்காநின்ற, தனி தகவால் - மிகுந்த கிருபையோடு, உள்ளத்து - நமது மனத்தில், உறைகின்ற - தங்கியுள்ள, உத்தமன் - புருஷோத்தமனது, தன்மை - ஸ்வபாவத்தை, உணர்ந்து - ஆசாரியர்களால் அறிந்து, உரைத்தோம் - சொன்னோம்; எங்கள் முக்கியர்பால் - எங்களுடைய முக்கியரான ஆசாரியர்களிடத்தில், முன்னே - எதிரில், முள் ஒத்த - முட்களைப்போல் கொடுமையாளரான, வாதியர் - வீண்வாதம் செய்பவர், வரில் - வந்தால், வெள்ளத்து இடையில்- நடு வெள்ளத்தில் அகப்பட்ட, நரிபோல் - குள்ள நரியைப்போல், விழிக்கின்ற - பதில் சொல்லமாட்டாமல் விழிக்கின்ற, வீணர்களே - பயனற்றவர்களே யாவர். (எ - று.)

(க - து.) நமது மனத்துள் வீற்றிருக்கும் எம்பெருமானது குணங்களைத் தெரிந்து வெளியிட்டோம்; நமது ஆசாரியர்களுக்கு முன் இதர வாதியர் தலைகாட்டார் என்கிறார்.

(கு - பு.) நரி பெருவெள்ளத்தை நீந்தும் வன்மையின்றி விழிப்பது போல், அவரும் நம்மாசாரியரை வெல்ல முடியாமல் தகைப்பர் என்க. 'பெற்ற மனம் பித்து' என்பது போல, நாம் என்ன பாவம் செய்தாலும் அவன் அதைப் பாராட்டாது யாதானுமோர் காரணத்தைக் கொண்டு காக்கின்றான் என்கிறார். (21)

இதுவுமது.

செய்யேல் மறமென்று தேசிகன் தேவன் கருத்துரைத்த
மெய்யே யரும்பொருள் சூடிய வெண்மதி காதலியாம்
பொய்யேய் பகைப்புல னையிரண் டொன்றும் பொருங்கருவி
கையேறு சக்கரக்காவலன் காவ லடைந்தவர்க்கே. (உஉ)

(இ - ள்.) பொய் ஏய் - தப்பு வழியில் பிரவேசிக்கின்ற, பகை - விரோதிகளாகிய, புலன் ஐயிரண்டு ஒன்றும் - பதினொ ரிந்த்ரியங்களையும், பொரும்- போர் செய்து நல்வழிப்படுத்துகின்ற, கருவி - ஆயுதமாகிய, கை ஏறு - திருக்கரத்திலிருக்கின்ற, சக்கரம் - திருவாழியையுடையவனும், காவலன்- காக்குமவனுமான கண்ணபிரானது, காவல் - ரக்ஷையை, அடைந்தவர்க்கு - பெற்றவர்க்கு, 'மறம் செய்யேல் - பாவத்தைச் செய்யாதே', என்று—, தேசிகன் - ஆசாரியன், தேவன் - ஸர்வேசுவரனாகிய நாராயணனது, கருத்து - அபிப்பிராயத்தை, உரைத்த - அருளிச்செய்த, மெய்யே - மெய்ம்மையையுடைய, அரும் - அரிதாகிய, பொருள் - அர்த்தங்களை, சூடிய - அடைந்த, வெண்மதி - நல்ல புத்தியானது, காதலியாம் - இன்பந் தரத்தக்க மனைவி போன்றதாம். (எ - று.)

(க - து.) ஸ்ரீ கண்ணபிரானது அடியார்களுக்கு அவன், 'பாபத்தைச் செய்யாதே' என்று உரைத்தருளியதை ஆசாரியரால் தெரிந்து தெளிந்த நல்ல புத்தியே சுகந் தரத்தக்கதாம்.

(கு - பு.) சக்ரத்தாழ்வான் வெளிப்பகையைப்போல் உட்பகையையும் ஒழிக்க வல்லவ ரென்பது தோன்ற நின்றது. வெண்மதி - என்பதில் இங்கு வெண்மை பிரகாசத்தைக் குறிக்கின்றது. காதலி சிற்றின்பந் தருவதுபோல், அம்மதி பேரின்பத்துக்குக் காரணமா மென்க. காவலடைந்ததாவது - அவ னால் ரக்ஷாபரஸ்வீகாரம் செய்யப்பெற்றமை. (22)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அந்தமிலா திதேவனழி செய்தடைந்த வலைவேலை
[யோத மடையச்
செந்தமிழ்நூல் வகுத்தசிறு மாமனிச்சர் சிறு
[கைச் சிறுங்கை மறைபோல்
சந்தமெலா முரைப்பதிது வென்று தங்களிதயத்த
[டக்கி யடையும்
பந்தமெலா மறுத்தினரு டந்துகந்து பரவும் பொ
[ருள்க ளிவையே. (உ௩)

(இ - ள்.) அந்தம் இல் - முடிவற்ற, ஆதி தேவன் - காரணபூதனான ஸ்ரீமந்நாராயணன், அழி செய்து - பிரளயத்தில் உட்கொண்டு, அடைந்த - பின்பு சிருஷ்டித்த, அலை - அலையோடு கூடிய, வேலை - கடலினது, ஓதம் அடைய - நீர் முழுதும், செம் தமிழ் நூல் - நல்ல தமிழ் நூல்களை, வகுத்த - வகை பெறச் செய்த, மா - பெருமை பொருந்திய, சிறு மனிச்சர் - குறுமுனி வராகிய அகஸ்திய முனிவர், சிறு கை - சிறிய கையினது, சிறுங்கை - உள்ளங் கையில், மறை போல் - மறைத்ததுபோல், சந்தம் எலாம் - வேத சாஸ்தி ரங்களை யெல்லாம், உரைப்பது - சொல்வது, இது என்று - இப்ரபந்த மென்று, தங்கள் இதயத்து - தங்கள் மனத்தில், அடக்கி - இதன் பொருள் களை யடக்கி, அடையும் - கர்ம வசத்தால் வரும், பந்தம் எலாம் - பாசங் களை யெல்லாம், அறுத்து - போக்கி, இன் - இனிமையான, அருள் தந்து - கிருபையைச் செய்து, உகந்து - உகக்கும்படி, பரவும் - விரிகின்ற, பொருள் கள் - பொருள்களாம், இவை - இப்பொருள்கள்.

(க - து.) அகஸ்திய முனிவரது உள்ளங்கையில் அடங்கிய கடல்போல், வேத சாஸ்திரங்களின் பொருள்களெல்லாம் இப் பிரபந்தத்தில் அடங்கி யுள் ளன வென்பதாம்.

(கு - பு.) அகஸ்தியர் சமுத்திர ஜலத்தை யெல்லாம் ஆசமநம் பண்ணி விட்டா ரென்பது புராண கதை. உகந்து என்பது செயவெனச்சத் திரிபு. சிறுங்கை - விரல்களைச் சேர்த்த உள்ளங்கை. மறை - முதனிலைத் தொழிற் பெயர். மனிச்சர் - மனிதர். சிறுங்கை நீட்டல்.

இது, முதல் நான்கு சீரும் காய்ச்சீரும் கடையிரண்டும் மாச்சீருமா கிய அறுசீரடி யாசிரிய விருத்தம். (23)

கட்டளைக்கலித்துறை.

முக்குண மாயையின் மூவெட்டின் கீழ்வரு மூவகையும்
இக்குண மின்றி யிலங்கிய காலச் சுழியினமும்
நற்குண மொன்றுடை நாகமு நாரா யணனுடம்பாய்ச்
சிற்குண மற்றவை யென்றுரைத் தாரெங்க டேசிகரே. (உச)

(இ - ள்.) எங்கள் தேசிகர் - எமது ஆசாரியர்கள், முக்குணம் - மூன்று குணங்களையுடைய, மாயையின் - பிரகிருதியின் விகாரமாகிய, மூ எட்டின் கீழ் வரு - இருபத்துநாலு தத்துவங்களிலு முண்டான, மூ வகையும் - மூன்று விதமும், இ குணம் இன்றி - இந்தக் குணங்கள் இல்லாமல், இலங்கிய - விளங்கின, காலம் சுழி இனமும் - கால சக்கிரமும், நல் குணம் ஒன்று உடை - ஸத்வகுணம் ஒன்றையே யுடைய, நாகமும் - பரமபதமும், நாராயணன் உடம்பாய் - ஸ்ரீமந்நாராயணனுக்குச் சரீரமாய், சித்குணம் அற்றவை என்று - சித்துக்குள்ள ஞானமென்னும் குணமில்லாதவை என்று, உரைத்தார் - சொன்னார்கள். (எ - று.)

(க - து.) பிரகிருதி, காலம், சுத்தஸத்வம் ஆகிய மூன்றும் அசேதனங்கள். மூவகை என்பது, பிரகிருதி விகிருதி இவைகளின் சேர்க்கை. சுத்தஸத்வ மென்பது, ரஜஸ்ஸூம் தமஸ்ஸூம் கலவாத ஸத்வம். அது ஸ்ரீவைகுண்டம் முதலியன. இவை எம்பெருமானுக்குச் சரீரமென்க. (24)

நேரிசை வெண்பா.

என்தென் பதுமியா னென்பது மின்றித்
தனதென்று தன்னையுங் காணு—துனதென்று
மாதவத்தான் மாதவற்கே வன்பரமாய் மாய்ப்பதன்றிக்
கைதவத்தான் கைவளரான் காண். (உரு)

(இ - ள்.) எனது என்பதும் - எல்லாம் என்னுடைய தென்பதும், யான் என்பதும் - நான் என்று நினைப்பதும், இன்றி - இல்லாமல், தன்னையும் - உடம்போடு கூடிய தன்னையும், தனது என்று - தனக்குச் சொந்தமென்று, காணுது - பாராமல், மா தவத்தால் - பரஸமர்ப்பணத்தால், மாதவற்கே - திருநாராயணனுக்கே, உனது என்று - எல்லாம் உன் உடைமை என்று, வல் பரமாய் - திடமான பாரமாய், மாய்ப்பது அன்றி - ஸமர்ப்பிப்பதை விட்டு, கை தவத்தான் - வஞ்சனை செய்பவன், கைவளரான் - க்ஷேமமடையான். (எ-று.) காண் : முன்னிலையசை.

(க - து.) ஜீவன் அகங்கார மமகாரங்களை விட்டு எல்லாம் நீயே என்று திருநாராயணன் திருவடிகளில் தன் பாரத்தை ஸமர்ப்பிக்கவேண்டும் என்பதாம்.

(கு - பு.) சரணாகதி மோக்ஷம் தருவதாகையால் 'மாதவம்' என்னப்பட்டது. 'எனதென்பதுமின்றி யானெனென்பதுமின்றி' என்றும் பாடம். (25)

கட்டளைக்கலித்துறை.

பல்வினை வன்கயிற்ருற் பந்தமுற் றுழல்கின் றனரும்
நல்வினை மூட்டிய நாரண ஞர்பதம் பெற்றவரும்
தொல்வினை யொன்று மில்லாச்சோதி வானவ ருஞ்சுருதிச்
சொல்வினை யோர்ந்தவர் சீவரென் ருேதச்சிறந்தனரே. (உசு)

(இ - ள்.) பல் வினை-பல கர்மங்களாகிற, வல் - பலமான, கயிற்ருல் - பாசத்தால், பந்தம் உற்று - கட்டப்பட்டு, உழல்கின்றனரும் - ஜநந மரண துக்கத்தால் வருந்துபவரும் (பத்தர்களும்), நல்வினை - சுகிர்தத்தில், மூட்டிய - சேர்த்த, நாரணனுர் - ஸ்ரீமந்நாராயணனது, பதம் - ஸ்ரீவைகுண்டத்தை, பெற்றவரும் - அடைந்தவரும் (முக்தர்களும்), தொல் வினை ஒன்றும்-பழைய வினை சிறிதும், இல்லா-இல்லாத, சோதி-பிரகாசமுள்ள, வானவரும் - தேவர்களும் (நித்யர்களும்), சுருதி - வேதத்திலே, சொல் - சொல்லியுள்ள, வினை - கர்மங்களை, ஓர்ந்தவர் - அறிந்த பெரியோர், சீவர் என்று ஓத - சேதனர்களென்று சொல்லும்படி, சிறந்தனர் - சிறப்புற்றவராவர் (எ - று.)

(க - து.) இங்கே ஜனன மரண துக்கத்தில் உழல்பவரும் பிரபத்தியுபாயத்தால் இவற்றை யொழித்து மோக்ஷமடைந்தவரும் நித்யசூரிகளுமாகிய மூவகையோரும் சேதனர்களாவார்கள்.

(கு - பு.) பத்தர், முக்தர், நித்யர் என்று சேதனர் மூவகையாவரென்க. (26)

நேரிசை வெண்பா.

ஆரணங்க ளெல்லா மடிசூட மேனின்ற
காரணமா யொன்ருற் கலங்காதா—னாரணனே
நம்மேல் வினைகடியு நல்வழியிற் ருனின்று
தன்மேனி தந்தருளுந் தான். (உஎ)

(இ - ள்.) ஆரணங்கள் எல்லாம் - வேதங்களெல்லாம், அடி சூட - தன் திருவடியைச் சிரத்தில் தாங்கும்படி, மேல் நின்ற - உபநிஷத்தின் மேல் விளங்குகின்ற, காரணமாய் - அனைத்துக்கும் மூலமாய், ஒன்ருல் - வேறு எதனுலும், கலங்காதான் - கலக்கமடையாதவனுகிய, நாரணனே - ஸ்ரீமந்நாராயணனே, நம்மேல் - நம்மைப் பற்றியுள்ள, வினை - பாவங்களை, கடியும் - போக்குகின்ற, நல்வழியில் - நல்ல மார்க்கத்திலே, தான் நின்று - தானே இருந்து, தன் மேனி - தனது திவ்யமங்களவிக்கிரக சேவையை, தந்தருளும் - கொடுத்தருளுவான் (எ - று.) தான் - அசை.

(க - து.) வேதங்களெல்லாம் தன் திருவடிகளைச் சிரத்தில் வகிக்கும்படி விளங்கும் ஸ்ரீமந்நாராயணனே ப்ரபந்நனுக்குப் பக்தியின் ஸ்தானத்தில் தான் நின்று ப்ரதிபந்தகங்களைப் போக்கித் தன் திருவடியிற் சேர்த்துக்கொள்வன் என்கிருர். (27)

கட்டளைக்கலித்துறை.

குடன்மிசை யொன்றியுங் கூடியு நின்ற கொடுந்துயரும்
உடன்மிசை தோன்று முயிரு முயிர்க்குயி ராமிறையும்
கடன்மிசை கண்டவை தானத் திரளவை போர்த்த பொன்னூல்
மடன்மிசை வார்த்தை யதன்பொரு ளென்ன வகுத்தனமே.(உஅ)

(இ - ள்.) குடல் மிசை - உடம்பில், ஒன்றியும் - உள்ளே பொருந்தியும், கூடியும் - மேலே சேர்ந்தும், நின்ற - இருக்கின்ற, கொடுந் துயரும் - கொடுமையான துக்கத்திற்கு இருப்பிடமாகிய பிரகிருதியும், உடல் மிசை - உடம்பினுள், தோன்றும் உயிரும் - இருக்கும் ஆத்மாவும், உயிர்க்கு உயிராம் - அந்த ஆத்மாவில் அந்தர்யாமியாய் விளங்கும், இறையும் - ஈசுவரனுமாகிய தத்வங்களை, கடல் மிசை கண்டவை - சமுத்திரத்தினுள் கண்ட முத்துக்களும், அவை போர்த்த தானம் திரள் - கூட்டமாகிய அவைகளுக்கு இருப்பிடமான சிப்பங்களும், பொன் - அழகிய, நூல் - சாஸ்திரமும், மடல் மிசை வார்த்தை - அதன் பிரிவிலுள்ள சப்தங்களும், அதன் பொருள் - அதன் அர்த்தமும், என்ன - என்று உவமையாகச் சொல்லும்படி, வகுத்தனம் - உரைத்தோம். (எ - று.)

(க - து.) கண்ணபிரான் எப்போதும் சிதசித்துக்களில் கலந்துளன்.

(கு - பு.) குடல் உடம்புக்கு ஆகுபெயர். கடலும் நூலும் அசித்துக்கும், சிப்பமும் வார்த்தையும் சித்துக்கும், முத்தும் பொருளும் ஈசுவரனுக்கும் திருஷ்டாந்தங்கள். கடலில் சிறந்தது முத்தாகையால் கண்டவை யென்கிறார். (28)

இதுவுமது.

தத்துவந் தன்னில் விரித்திடத் தோன்று மிரண்டுதன்னில்
பத்தி விலக்கிய பாடண்டர் வீசுறும் பாசமுறார்
எத்திசை யுந்தொழு தேத்திய கீர்த்திய ரெண்டிசையார்
சுத்தருரைத்த சுளக மருந்திய தூயவரே. (உகூ)

(இ - ள்.) எத்திசையும் - திக்குக்களிலெல்லாம், தொழுது ஏத்திய - வணங்கித் துதிக்கப்பட்ட, கீர்த்தியர் - கீர்த்தியையுடையவரான, எண் திசையில் - எட்டுத் திக்குக்களிலும், சுத்தர் - சுத்தர் என்று சொல்லப்படும் ஆசாரியர்கள், உரைத்த - உரைத்தருளிய, சுளகம் - தத்துவத்ரய சுளகமென்பதை, அருந்திய - பானம் பண்ணின, தூயவர் - பரிசுத்தர்கள், தத்துவம் தன்னில் - தத்துவங்களில், விரித்திட-விளங்கச் சொல்லுகையால், தோன்றும் - விளங்குகின்ற, இரண்டு தன்னில் - இரண்டு தத்துவங்களில், பத்தி விலக்கிய - விசுவாசமில்லாத, பாடண்டர் - பாஷண்டர்கள், வீசுறும் - வீசுகின்ற, பாசம் உறார் - மயக்கத்திற்கு உள்ளாகார். (எ - று.)

(க - து.) எமது ஆசாரியர் சொல்லிய தத்துவத்ரயசுளகம் தெரிந்தவர்கள் பாஷண்டரது மயக்க நூலுக்கு உட்படமாட்டார்கள் என்பதாம்.

(கு - பு.) மாயாவாதிகள் சித்தும் அசித்தும் இல்லை, பிரம்பமேயுள்ள தென்கின்றனர். திசை - இடவாகுபெயர். பாசம் - அது போன்ற நூலுக்கு உவமவாகுபெயர். (29)

இதுவுமது.

வினைத்திரண் மாற்றிய வேதியர் தந்தநல் வாசகத்தால்
அனைத்து மறிந்தபி னாறும் பயனு மெனவடைந்தோம்
மனத்தி லிருந்து மருத்தமு தாகிய மாதவனார்
நினைத்தன் மனத்தி லரிதாகி நின்றன நீள்கழலே. (௩௦)

(இ - ள்.) மனத்தில் இருந்து - எமது மனத்தில் வீற்றிருந்து, மருத்து - மருந்தும், அமுது - அமிர்தமும், ஆகிய - ஆகின்ற, மாதவனார் - லக்ஷ்மீ பதியினுடைய, மனத்தில் நினைத்தல் - மனத்தினால் நினைக்கவும், அரிதாகி நின்றன - முடியாமலிருக்கின்ற, நீள் கழல் - உலகம் அளந்த பெரிய திருவடிகளை, வினை திரள் - நமது மிக்க பாவங்களை, மாற்றிய - போக்கிய, வேதியர் - வேதாந்தங்களில் வல்லவரான ஆசாரியர்கள், தந்த - போதித்த, நல் - நல்ல, வாசகத்தால் - அர்த்தங்களினால், அனைத்தும் அறிந்த பின் - தத்துவங்களை யெல்லாம் தெரிந்த பின்பு, ஆறும் பயனும் என - உபாயமும் பலனுமாக, அடைந்தோம் - அந்தத் திருவடிகளே நமக்குக் கதியென்று அடைந்தோம். (எ - று.)

(க - து.) நமது பாவங்களைப் போக்கிய ஆசாரியரது வாக்கியங்களால் ஸ்ரீமந்நாராயணது திருவடிகளே உபாயமும் பயனுமென்று அடைந்தோம் என்பதாம்.

(கு - பு) மருந்து - மருத்து என வன்றொடராயது. (30)

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஸிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:.

ஸ்ரியை நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

தவ தாஸ்ய ஸுகைக ஸங்கிநாம்
பவநேஷ்வஸ்த்வபி கீடஜந்ம மே ।
இதராவஸதேஷு மா ஸ்ம பூ-
தபி மே ஜந்ம சதுர்முகாத்மநா ॥ 55.

---

55. தேஹ வியோக உத்தர காலிகமான பரமபுருஷார்த்தத்தை பஹுமாந:ஸ் ப்ரார்த்தித்துவிட்டு, தேஹ வியோகம் நேரும் வரையில் அவிச்சேதேந பகவதநுபவத்தை ப்ரார்த்திக்கிறவராய், ஸ்ரீ ஆளவந்தார், கீழ் ஸ்லோகத்தினல் பகவத் பக்தியை ப்ரார்த்தித்தார்; இந்த ஸ்லோகத்தினல் பாகவத பக்தியை ப்ரார்த்திக்கிறுர். உண்மையான பகவத் பக்தி ஒருவனுக்கு ஜநித்தால், பாகவத பக்தியும் அதன் பரீவாஹமாக ஸ்வபாவத்தினுலேயே ஸம்பவிக்கும். சில காலங்களில் பாகவத பக்தி, பகவத் பக்தியின் வ்ருத்திக்குக் காரணமாவது முண்டு.

"ஸம்பாஷா தர்ஸநம் ஸ்பர்ஸ: கீர்த்தநம் ஸ்மரணம் நதி: ।
பாவநாநி கிமேதாநி ஸாதூநாமிதி ஸுஸ்ரும ॥"

[ஸாதுக்களுடைய ஸம்பாஷணம் தர்ஸநம் ஸ்பர்ஸம் கீர்த்தநம் வந்தநம் இவையெல்லாம் அத்யந்தம் பரிஸுத்திகரங்கள்]

என்றும்,

"ஸாதூநாம் தர்ஸநம் புண்யம் தீர்த்தபூதா ஹி ஸாதவ: ।
காலேந பலதே தீர்த்தம் ஸத்ய: ஸாதுஸமாகம: ॥"

[ஸாதுக்கள் புண்ய தீர்த்தங்களைப் போன்றவரானபடியால், அவர்களுடைய தர்ஶநமே ஸ்ரீராமஸேதுவின் தர்ஶநம் போல புண்யம். ஒருகால் புண்ய தீர்த்தங்கள் சற்று விளம்பித்துப் பலத்தைக் கொடுக்கும்; ஸாதுக்களுடைய ஸமாகமம் அவ்விதமன்று; எவ்வித விளம்பமுமின்றிக்கே உடனே பலத்தைக் கொடுக்கக் கூடியது] என்றும் பாகவத பக்தியைப் பகவத் பக்திக்கு ஹேதுவாக மஹர்ஷிகள் ஶ்லாகித்துப் பேசியிருக்கிறார்கள். இதே பாகவத பக்தியானது, அநுபவதஶையில் ஸ்வயம் ப்ரயோஜநமாகவும் ஸம்பவிக்கும். இப்படி ஶாஶ்வத ஶ்ரேயஸ்ஸூக்கு ஸாதகமாகவும் ஸ்வயம் போக்யமாகவுமுள்ள பாகவத பக்திதான் இவ்விடத்தில் ப்ரார்த்திக்கப்படுகின்றது.

𑌤𑌵 𑌦𑌾𑌸𑍍𑌯𑌸𑍁𑌖𑍈𑌕𑌸𑌂𑌗𑌿𑌨𑌾𑌂 𑌭𑌵𑌨𑍇𑌷𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌪𑌿 𑌕𑍀𑌟𑌜𑌨𑍍𑌮 𑌮𑍇; 𑌇𑌤𑌰𑌾𑌵𑌸𑌥𑍇𑌷𑍁 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌭𑍂𑌦𑌪𑌿 𑌮𑍇 𑌜𑌨𑍍𑌮 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌾𑌤𑍍𑌮𑌨𑌾. [உன்னுடைய தாஸ்ய ஸுகத்தையே பரமபோக்யமாக அநுபவிக்கும் ஸாதுக்களுடைய ஸமாகமத்தை எனக்கு நீ கொடுத்தருள வேணும்; அவர்களுடைய வாஸஸ்தலங்களில் ஒரு புழுவாகப் பிறப்பதும் எனக்கு இஷ்டமே. உன்னிடமிருந்து விமுகர்களாக இருக்கும் அஸாதுக்களுடைய ஸமாகமம் எனக்கு ஒருபொழுதும் வேண்டாம்; அவர்களுடைய க்ருஹத்தில் சதுர்முகாதி ஜந்மம் கிடைத்தாலும் அது எனக்கு ருசியாது.] இதனால் ஸ்ரீ ஆளவந்தார், மறுபடியும் ஒரு ஜந்மத்தை ப்ரார்த்திப்பதாக நாம் நினைக்கக்கூடாது. முமுக்ஷுவாக இருக்கும் ஸ்ரீ ஆளவந்தார் மறுபடியும் ஸம்ஸ்ருதியை ப்ரார்த்திப்பர் என்பது அநுபபந்நம்.

“𑌆𑌰𑌾𑌧𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌾𑌰𑌾𑌧𑌨𑌂 𑌪𑌰𑌂 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌦𑍀𑌯𑌾𑌰𑌾𑌧𑌨𑌂 𑌪𑌰𑌂 ॥”

என்கிறபடி, பாகவதாராதநத்திலும் அவர்களுடைய ஸமாகமத்திலும் தமக்குள்ள ஆஸ்தாதிஶயத்தை இவ்விதமான ப்ரார்த்தநையினால் ஸூசிப்பித்தார் என்று மட்டில் நாம் க்ரஹிக்க வேணும்.

தவ தாஸ்ய ஸுகைகஸங்கிநாம் - உன்னுடைய கைங்கர்யத்திலுள்ள ஸுகத்திலேயே ஆஸக்தியையுடைய. பகவத் தாஸ்யத்தில் ருசி ஜநிப்பது பெரியதொரு பாக்யவிசேஷமே. அதிலும், வைஷயிக ஸுகத்திலிருந்து விமுகர்களாய் பகவத் தாஸ்யத்திலேயே ஏகாந்த ஆஸக்தியைப் பெறுவது மிகப் பெரியதான மஹா பாக்யமன்றோ?

"அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ।
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ॥"

[என்னிடம் அநந்ய பக்தி செய்கிறவன் ஸாதுவே; அவன் எல்லாராலும் பஹுமாநிக்கத்தகுந்தவன்] என்று அவனுடைய பெருமையை ஸ்ரீ பகவானே கொண்டாடியிருக்கிறார். அப்படிப்பட்ட மஹாந்களுடைய கடாக்ஷத்தை ப்ரதீக்ஷிப்பது ந்யாய்யமே.

'தாஸ்ய மென்பது பாரதந்த்ர்யத்தைச் சொல்லும்; பாரதந்த்ர்யம் எப்பொழுதும் து:காவஹமாகையால், தாஸ்யத்தில் ஸுகம் எப்படி உபபந்நமாகும்?' என்னும் ஶங்கைக்கு, பகவத் பாகவத வ்யதிரிக்த விஷயத்தில் பாரதந்த்ர்யம் து:காவஹமே தவிர, இவர்களிடத்தில் அது போக்யமே என்பது ஸமாதாநம்.

"தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:"

என்கிறபடி பகவத் தாஸ்யமே நமது ஸ்வரூபமாக இருக்கையில், அதை நன்றாக உணர்ந்துள்ளவர்களுக்கு அது எப்படி து:காவஹமாகும்?

"ஸ்வச்சந்த கிங்கரதயா பவத: க்ருபாலோ
ஸ்வாராஜிகம் வ்ரதமிதம் ஸாம்ராஜ்யகாரம்"

என்று இந்தத் தாஸ்யத்தை ஸ்வச்சந்த கைங்கர்ய மென்றும் ஸ்வரூபத்திற்கு உசிதமான பெரியதொரு அதிகாரமென்றும் அதன் ருசியை அறிந்தவர்கள் கொண்டாடியிருக்கிறார்கள்.

"ஐஶ்வர்ய கைவல்ய ஸுகங்கள் விக்நமாம்படியிறே தாஸ்ய ஸுகமிருப்பது" என்பது ஸ்ரீ பிள்ளையின் திவ்யஸூக்தி.

பவநேஷ்வஸ்த்வபி கீடஜந்ம மே - அந்த ஸாதுக்களுடைய க்ருஹங்களில் ஒரு கீடமாய்ப் பிறப்பதாவது எனக்குக் கிடைக்கவேணும். 'நம்மால் அத்யந்தம் நிஹீநமென்று நினைக்கப்படும் கீடஜந்மாவும் உன்னுடைய ப்ரீதிபாத்ரர்களான மஹாங்களுடைய ஸம்பந்தம் பெற்றதானால், அதுவே அதிமாத்ரம் உத்க்ருஷ்டமாகும்' என்பது தாத்பர்யம். ஶேஷத்வ காஷ்டையை நன்றாக அறிந்துள்ள ஸ்ரீ ஆளவந்தாருக்கு, பாகவத அபிமாநத்திற்கு விஷயமாகும் தேஶத்தில் வஸிப்பதையும் அவர்களுக்குக் கைங்கர்யம் செய்வதையும் தவிர வேறு என்ன அபேக்ஷிதமாகும்?

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை, இவ்விடத்தில் 'அபி' என்னும் பதத்திற்கு 'ஏவ' என்பது அர்த்தமென்றும், 'கீட ஜந்மமே அபேக்ஷிதம், மற்றவர்கள் ஆசைப்படும் உத்க்ருஷ்ட ஜந்மம் தமக்கு வேண்டாம்' என்பது ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளமென்றும் அநுக்ரஹித்திருக்கிறார். இது, ருஜுவான நைச்யாநுஸந்தாநத்தின் பரா காஷ்டையைக் காட்டுகிறபடி. தவிரவும், தாஸ்ய ரஸம் ரஸித்தால், பகவத் தாஸர்களுடைய ஸந்நிதாநத்தில் ஆத்ம விஷயகமான உத்க்ருஷ்ட அபக்ருஷ்ட ஜ்ஞாநம் எப்படி ஸம்பவிக்கும்? ஸந்நிதாநம் ஸமக்ரமே ஸர்வோத்க்ருஷ்டமாக இருக்கையில்; அபகர்ஷ மென்பது ஏது? என்பதும் குறிப்பு.

இதராவஸதேஷு - அபாகவதர்களுடைய க்ருஹங்களில். தாஸ்ய ரஸம் அறியாமல் ஸ்வதந்த்ராத்ம ப்ரமம் கொண்டவர்களுடைய ஸமீபத்தில், என்பது தாத்பர்யம்.

மாஸ்மபூதபி மே ஜந்ம சதுர்முகாத்மநா - ஸாக்ஷாத் சதுர்முகனாகப் பிறப்பதும் எனக்கு வேண்டாம். அதாவது - அவ்வளவு ஐஶ்வர்ய பூர்த்தி இருந்த போதிலும் அது ஶ்லாக்யமன்று, என்பது அர்த்தம். 'அந்த ஐஶ்வர்யம் பகவத் தாஸ்ய ருசியை அறியாதவர்களுக்கு ஶ்லாக்யமேயாயினும், எனக்கு அது அநபேக்ஷிதம்' என்கிறபடி.

"வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர் வ்யவஸ்திதி: ।
ந ஶௌரிசிந்தா விமுக ஜந ஸம்வாஸ வைஶஸம் ॥"

[நாலு பக்கங்களிலும் அக்நி ஜ்வாலைகளினால் சூழப்பட்டுள்ள கூண்டுக்குள் வஸித்தாலும் வஸிக்கலாம்; பகவத் ஸ்மரண மற்றிருக்கும் துர்ஜநர்களுடைய மத்யத்தில் வஸிப்பது அரிது.] என்பதன்றோ பாகவதர்களுடைய ஸ்திதி?

உண்மையாகவே சற்று ஆலோசித்துப் பார்த்தால், பரம புருஷார்த்தம் ஸித்திக்கும் வரையில் நம்மால் ப்ரார்த்திக்கப்பட வேண்டிய ஶ்ரேயஸ் இதுவே என்பது விளங்கும்.

“ஏவம் ப்ரதீக்ஷஸி ததாஸ்மி ஸமீபதஶ்ச
ஸ்வாத்யஸ்தி ஸித்திரசலா கரிஶைலநாத! |
ஸம்ஸ்ருஜ்யதே ச யதி தாஸஜநஸ் த்வதீய:
ஸம்ஸார ஏஷ பகவந் அபவர்க ஏவ ||”

[ஹே கரிகிரி நாதனே! நீயும் என்னை அநுக்ரஹித்து, உன்னுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தின் ஸாக்ஷாத்காரமும் எனக்குக் கிடைத்து, உன்னிடத்தில் ஏகாந்த பக்தியைச் செய்யும் பாக்யத்தையும் நான் பெற்று, உன்னுடைய தாஸ்ய ஸுகத்தில் ஏகாந்த ஸங்கிகளான பாகவதர்களுடைய ஸம்ஸர்க்கத்திற்கும் நான் பாத்ரமாகி விட்டால், வேறு என்ன எனக்கு அபேக்ஷிதமாகும்? இந்த ஸம்ஸாரமே மோக்ஷத்திற்கு ஸமாநமாகி விடுமென்றோ?] என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் ப்ரார்த்தித்திருக்கிறார். ஶுக ப்ரப்ருதிகளான மஹர்ஷிகளும்,

“யாவதேதாயயா ஸ்ருஷ்டா ப்ராம்யாம இஹ கர்மபி: |
தாவத்பவது ஸங்காநாம் ஸங்கஸ்தேஷு பவே பவே ||
துலயாம லவேநாபி ந ஸ்வர்க்கம் நாபுநர்பவம் |
பகவத்ஸங்கி ஸங்கஸ்ய”

[கர்ம வஶ்யர்களாய் இந்த ஸம்ஸாரத்தில் நாங்கள் ப்ரமித்து உழலும் வரையில் பாகவத ஸம்ஸர்க்கம் மட்டில் எங்களைவிட்டு விலகாமல் இருக்க வேணும். ஏனென்றால், தேவ லோகத்தின் ஐஶ்வர்யமோ, அல்லது அதைவிடச் சிறந்ததான அபுநர்பவ ரூபமான கைவல்யமோ, இந்தப் பாகவத ஸம்ஸர்க்கத்தின் லேஶத்திற்குக் கூட துல்யமாகாதன்றோ?] என்று தமது மநோரதத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

வேதாந்த ஸங்க்ரஹம்.

எல்லா உலகங்களுக்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி நாசம் முதலிய வற்றிற்குக் காரணமான ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்வரூபமும் கல்யாண குணங்களும் வேதத்தின் முக்ய பாகமான உபநிஷத்துக் களில் நன்றாய் வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்த ஸ்ரீமந் நாரா யணன் பக்தர்களை ரக்ஷிக்க வேண்டும் என்றே தீக்ஷித்துக்கொண் டிருக்கிறான். அப்படிப்பட்டவனிடத்தில், ஆராத ப்ரேமத்து டன் கூடியவும் கேவலம் ப்ரத்யக்ஷம் என்றே சொல்லக்கூடியவு மான அநுபவ ரூபமான பரமபக்தி, நமக்கு எல்லாருக்கும் உண்டா கும்படி அவனே அநுக்ரஹிக்கும்படி மிக்க வணக்கத்துடன் ப்ரார்த்திக்கிறோம். வேதாந்த சாஸ்த்ரத்தில் கொஞ்சமும் பரி சய மில்லாதவர்களுக்கு அந்த சாஸ்த்ரத்தின் முக்ய தாத்பர்யம் தெரியும்படிக்கு இந்த ‘வேதாந்த ஸங்க்ரஹம்’ எழுதப்படுகிறது.

நம்முடைய ஸநாதந தர்மத்துக்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந் தத்துக்கும் வேதமே முதல் ப்ரமாணமென்பது ஸகலருக்கும் தெ ரிந்த விஷயம். இதை நம்முடைய பரமாசார்யரான நம்மாழ்வார், “சுடர்மிகு சுருதியுள்” என்று அருளிச் செய்திருக்கிறார். அவ ரைப் பின் செல்லுமவரான பட்டர், ‘[illegible]வேதா: ப்ரமாணம்’ என்று வெளியிட்டிருக்கிறார். இந்த வேதமானது, கர்மகாண் டம் ஜ்ஞாநகாண்டமென்று இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டுள் ளது. பூர்வபாகம், பகவானுடைய ஆராதந ரூபமான கர்மங்க ளைப் பற்றிச் சொல்லுகிறது. உத்தர பாகமாகிற உபநிஷத்துக் கள், ஆராதிக்கப்படும் வஸ்துவாகிற பரப்ருஹ்மத்தின் ஸ்வரூபத்

த்தையும், குணத்தையும், உபாஸந க்ரமத்தையும், ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும், அவைகளுக்கு அநுகுணங்களான ஜ்ஞாந ஶக்த்யாதிகளையும் சொல்லி, மோக்ஷத்தின் ஸ்வரூபத்தையும் விவரிக்கின்றன. "க்ஷுத்ர ப்ராவிப்ரவாஸி வஸிக்ஷீயதே வத்ருவ ஸ்ராய: ஊர்த்வாஹாரஸ்ஸீஹா ஶண விஹவ வஸிஜ்ஞாவத்யே நஸ்ஸ ஈஷா த்வள" என்று பட்டர் அருளிச்செய்திருக்கிறார்.

உபநிஷத்துக்களை வேதாந்தம் என்று சொல்வார்கள். உபநிஷத்துக்கள் அநேகமாயிருந்தாலும், யாவராலும் புராதநமாக ஒப்புக்கொள்ளப்பட்டவைகள் ஸுமார் பதினைந்து இருக்கின்றன. அவைகளில் பத்து உபநிஷத்துக்கள் மிக முக்யம். அவை ஈஶ கேந கட முண்டக மாண்டூக்ய ப்ரஶ்ந தைத்திரீய ஐதரேய சாந்தோக்ய ப்ருஹதாரண்ய உபநிஷத்துக்கள். இந்த தைத்திரீயத்தில் ஒரு பாகத்தை நாராயண உபநிஷத்து என்று வேறு உபநிஷத்தாகச் சொல்லப்படுமதையும், ஶ்வேதாஶ்வதர ஸுபால கௌஷீதகி உபநிஷத்துக்களையும் முக்யமாக ஸகலரும் ப்ரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மேற் சொல்லிய உபநிஷத்துக்களின் அர்த்தம், எளிதில் ஒரு ஒழுங்காய், ஒன்றுக்கொன்று விரோதமில்லாதபடி, ஒரு நிர்ணயமான ஸித்தாந்தமாகத் தெரியும்பொருட்டுப் பகவதவதாரமாகச் சொல்லப்படும் வேத வ்யாஸர் அல்லது பாதராயணர் என்ற மஹர்ஷி உபநிஷத்துக்களின் அர்த்தங்களை மிகவும் சுருக்கமான ஸூத்ரங்களாகச் செய்தருளினர். இதற்கு ப்ரஹ்மஸூத்ரம் என்றும், ஶாரீரக மீமாம்ஸா ஸூத்ரம் அல்லது வேதாந்த ஸூத்ரம் என்றும் பெயர். நம்முடைய ஹிந்து மதத்தில், உபநிஷத் வேதாந்தஸூத்ரம் பகவத்கீதை இம்மூன்றுக்கும் ப்ரஸ்தாநத்ரயம் என்று பெயர். இந்த வேதாந்த ஶாஸ்த்ரந்தான் முக்ய ப்ரமாணம். ஶ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ஆழ்வார் அருளிச்செய்த த்ராவிட வேதமாகிய த்ரமிடோபநிஷத்துக்களையும் ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தையும் சேர்த்து உபய வேதாந்தத்தையும் ப்ரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வேதாந்த ஸூத்ரம் நாலு அத்யாயங்களடங்கியது. முதலிரண்டு அத்யாயங்களில், ஸித்தமாய் எப்போழுது மிருக்கின்

றவரும், ஸர்வ ஜகத்துக்கும் காரணபூதரும், மோக்ஷத்தையு மளிப்பவருமான பகவானுடைய ஸ்வரூபம் முதல் அத்யாயத்தி லும், அந்த விஷயத்தில் பிறர் சொல்லும் ஆக்ஷேபணைகளுக்கு ஸமாதாநங்கள் இரண்டாவது அத்யாயத்திலும் விவரிக்கப்படுகின் றன. பின்னிரண்டு அத்யாயங்களில், மனிதனால் செய்யக்கூடிய த்யாநம் உபாஸநம் பக்தி என்பவற்றின் ஸ்பாவத்தையும் அதன் பிரிவுகளையும் அதைச் செய்யும் விதத்தையும் மூன்றாவது அத்யா யத்திலும், இப்படிப்பட்ட உபாஸனையின் பயனான மோக்ஷ ஸ்வ ரூபத்தை நாலாவது அத்யாயத்திலும் ஸூத்ரகாரர் வெளியிடுகி றார். ஒவ்வொரு அத்யாயம் நாலு பாதம்; ஒவ்வொரு பாதம் அநேக அதிகரணங்க ளடங்கியது. முதல் அத்யாயத்தில் அநேக மாய் ஒவ்வொரு அதிகரணத்துக்கும் ஆதாரமாக ஒவ்வொரு முக்ய ச்ருதி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு விஷய வாக்யம் என்று பெயர். வேதாந்த ஸூத்ரங்களுக்கு ஸ்ரீபகவத் ராமாநுஜாசார்யர் அருளிச்செய்திருக்கிற ஸ்ரீ பாஷ்யத்திற்கு இணங்க, முதல் அத் யாயம் முதல் பாதத்தி லுதாஹரிக்கப்பட்ட முக்ய ச்ருதிகளின் தாத்பர்யத்தைச் சுருக்கமாய் முதலில் சொல்லுகிறோம்.

1. க்ரமவிசாரத்துக்குப் பின் ப்ரஹ்ம விசாரம்.

முண்டகோபநிஷத்தில், (I-2-12.) "𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌚𑌿𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑌃 𑌕𑍃𑌤𑍇𑌨 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌗𑍁𑌰𑍁𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 । 𑌸𑌮𑌿𑌤𑍍𑌪𑌾𑌣𑌿𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌂 । 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌸 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍁𑌪𑌸𑌨𑍍𑌨𑌾𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌯 𑌶𑌮𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌯 । 𑌯𑍇𑌨𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌵𑍇𑌦 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌤𑌾𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂" [வேதத்தில் கர்மகாண்டத்தில் சொல்லிய யாகம் யஜ் ஞம் முதலானவைகள் அற்பமான நிலையில்லாப் பயன்களைக் கொ டுப்பனவே ஒழிய, சாச்வதமான நிரந்தர அளவில்லாத பேரின் பத்தைக் கொடுக்கமாட்டா. அதை ஒருவன் ப்ரஹ்மஜ்ஞாந மென் கிற பரமபக்தியால்தான் அடையக்கூடும். அப்படிப்பட்ட ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை அடைந்த ஆசார்யன் தகுந்த சிஷ்யனுக்கு அதை உப

தேசிக்கக்கடவன்] என்றும் சொல்லி யிருக்கிறது. பூர்வ காண்டத்தில் சொல்லப்பட்ட யாகம் யஜ்ஞும் முதலியவைகளின் ஸ்வபாவத்தையும் பயனையும் பூர்வ மீமாம்ஸா சாஸ்த்ரத்தைக்கொண்டு தெளிந்து, அவைகளை அற்பம் நிலையில்லாதன என்று தள்ளி, அதுவே காரணமாகப் பிற்பாடு உத்தர மீமாம்ஸை என்கிற வேதாந்த சாஸ்த்ரத்தில் ப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டியது.

ii. ப்ரஹ்ம லக்ஷணம்.

இந்த ப்ரஹ்மம் எவ்வித லக்ஷணமுடையதென்று பொதுவாய் தைத்திரீய உபநிஷத்தில் (III-1-1.) "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி ...... தத்ப்ரஹ்ம" இந்த ஸகல ஜகத்தும் எவனிடத்திலிருந்து உண்டாகி, எவனிடத்தில் ஜீவித்துக்கொண்டு, எவனாலே காக்கப்பட்டு, எவனாலே எவனிடத்தில் லயத்தை அடைகிறதோ, நன்றாய் அடைந்திருக்கிறதோ அந்த வஸ்து ப்ரஹ்மம். "யவையும் யவரும் தன்னுள்ளே யாகியும் ஆக்கியும் காக்கும்" "தனி முதல்" "அழிப்போடளிப்பவன் தானே" முழுதுண்ட பரபரன்" என்று ஆழ்வாருளிச் செய்தார். இப்படிப்பட்ட ஸர்வ ஶக்தனை ஸர்வஜ்ஞனை எவ்வித காரணமுமான ஈஶ்வரன் தான் ஒருவனாகவே இருக்கிறான் என்றும், யாதொன்றுக்கும் இன்னொரு காரணமில்லை என்றும்,

iii. வேதமே ப்ரமாணம்.

கேவலம் பிரத்யக்ஷத்தாலும் யுக்தி அநுமானங்களாலும் லௌகிக சாஸ்த்ரங்களாலும் நிச்சயிக்க முடியாது. மஹர்ஷிகளினுடைய ப்ரத்யக்ஷத்துக்கு ஸமானமான அநுபவத்தைச் சொல்கின்ற நித்யமான தெய்வீகமாயுள்ள வேத ப்ரமாணத்தால் தான் அறிய முடியும். இதையே ஆழ்வாரும் "சுடர் மிகு சுருதியுள் இவை யுண்டசுரன்" "மறையாய நால் வேதத்துள் நின்ற மலர்ச்சுடர்" 'வேதமயன்' 'வேத முதல்வன்' என்று வெளியிடுகிறார்.

iv. ப்ரஹ்மம் ஆநந்த ரூபம்.

அப்படி அறியப்படும் வஸ்து, ஸித்தமாய் நித்யமாய் இருப்பதோடுகூட வாயால் சொல்ல முடியாத ஆநந்த ரூபமான வஸ்துவானபடியால் அதை அடைவதே ந்யாயமான புருஷார்த்தம். 'ஆநந்தோ ப்ரஹ்ம', 'ரஸோ வை ஸ:' என்று வேதத்

தாலும், 'கன்னல் அமுது' 'ஈறிலின்பத் திருவுள்ளம்' 'அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்' 'பருகின்னமுது' 'சுவையன்' 'அமுதிலுமாற்ற வினியன்' 'முதிர் சுவை' 'வேத விமலர் விழுங்கும் என் அக்காரக்கனி' என்று ஆழ்வாராலும் அந்த ப்ரஹ்மம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகையால் ப்ரஹ்ம விசாரம் செய்வது ந்யாயம் என்று முதல் நாலதிகரணங்களால் ஏற்படுகின்றது.

இப்படி ஜகத் காரணமாகச் சொல்லப்படும் வஸ்து, கேவலம் மூலப்ருக்ருதி என்றும் அசித் என்றும் சொல்லப்படுகிற ஜடப் பொருள் என்று சிலர் சொல்லக்கூடும். ஸகலமும் ஒன்ருன ஒரு மூலப்ரக்ருதியின் பரிணமத்தால் உண்டாகிறது என்பது வேதப்படி ந்யாயமல்ல. சாந்தோக்யத்தில் ஆருவது ப்ரபாடகத்தில் '𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍 𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ...... 𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯𑍇𑌤𑌿 ...... 𑌅𑌨𑍇𑌨 𑌜𑍀𑌵𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌵𑌾𑌣𑌿 ...... 𑌸𑌨𑍍𑌮𑍂𑌲𑌾𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 .... 𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 ...... 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾', ஆதியில் இந்த ஜகத்தெல்லாம் கேவலம் இருக்கிறது என்று மாத்ரம் சொல்லும்படி ஒன்ருகவே இருந்தது; இரண்டல்ல; [𑌸𑌤𑍍=இருப்பு=உண்மை] இது ப்ரஹ்மம்; அது ஸங்கற்பித்தது; எண்ணிற்று; தானே வெகுவாயிற்று; தானே அநுப்ரவேசித்து நாமரூபமுண்டாய் வெகுவாய் நாமரூபத்துடன் வ்யவஹரிக்கக்கூடியதாயிற்று. இந்த சராசரம் அனைத்திற்கும் அந்த 𑌸𑌤𑍍சப்தத்தால் சொல்லப்பட்ட ப்ரஹ்மமே மூலம்; ஆதாரம்; ஆத்மா; அவன் எப்பொருட்கு முயிர். ஸகலமும் அவனுக்கு உடல்போல, எல்லாவற்றிற்குள்ளு மிருந்துகொண்டு நிர்வஹித்துக்கொண்டிருக்கிருன். ஆகையால் அவர் ஸர்வ சக்தியும் ஸர்வஜ்ஞானமு முடையவர். மேற்சொன்ன வாக்யத்தில் '𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤' ஸங்கற்பித்தது என்றும், இதேமாதிரி '𑌸 𑌈𑌕𑍍𑌷𑌤 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌨𑍁 𑌸𑍃𑌜𑌾 𑌇𑌤𑌿 ॥ 𑌸 𑌇𑌮𑌾𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌸𑍃𑌜𑌤' (ஐத. உப.) '𑌸 𑌈𑌕𑍍𑌷𑌾𑌞𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌸 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌸𑍃𑌜𑌤' (𑌪𑍍𑌰𑌶𑍍𑌨. உப) தன் ஜ்ஞானத்தால்

ஸ்ங்கற்பித்துச் சராசரமுண்டாயிற்று என்றும், 'ஸோகாமயத பஹுஸ்யாம்' (தைத்திரி) அநேகமாகிறேன் என்றும் இச்சித்தது என்றும், இதர வேதவாக்யங்களாலும், பகவான், ஆழ்வார் சொல்கிறபடி, 'எப்பொருட்கும் உயிராய் எல்லாப் பொருட்கும் வித்தாய்-தானொருருவாய்த் தனி வித்தாய்' இருக்கும் ஞானவெள்ளம்; கேவலம் ஜடமான மூலப்ருக்ருதி அல்ல என்ருயிற்று. மேற்சொன்ன சாங்தோக்யத்தில் எட்டாவது ப்ரபாடகத்தில் இதே ப்ரஹ்மத்தை 'ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:' [மஹா சுத்தனை, மூப்பு இறப்பு சோகம் முதலிய ஒரு கெடுதலு மில்லாத தான், நினைத்தபடி ஸகலமும் நிறைவேற்றுகிறவன்; அவனுடைய இச்சையும் எண்ணமும் உண்மையாகவே நிறைவேறும் ஸ்வபாவமுடையவன்] என்று விவரிக்கப் பட்டிருக்கிறது. 'ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்' என்று இன்னொரு உபநிஷத்தில் இந்தப் பரமாத்மா நாராயணன் என்றும் சொல்லியிருக்கிறது.

தைத்திரீயோபநிஷத்தில் ஆநந்தவல்லியில் இந்த ஜகத் காரணமான ஆநந்தமயன் பகவான் என்று சொல்லப்பட்டது. ஒரு ஸாதாரண மனிதனுடைய பூர்ணாநந்தம் என்பது இவ்வுலகில் இப்படிப்பட்டது என்று முதலில் சொல்லப்படுகிறது. அதாவது:— துக்கமாவது தாரித்ரியமாவது இல்லாமல் நல்ல ஸந்தாநம் ஸம்பத்துமிருந்து, வித்யை நன்னடவடிக்கை முதலியன இருந்து, ஒரு மனக்குறையு மில்லாத ஒரு ஸ்திதியை ஒரு மநுஷ்ய ஆநந்தம் என்று கணக்கு வைத்துக்கொண்டு, அது நூறு மடங்கு கொண்டது மநுஷ்ய கந்தர்வாநந்தம்; அது நூறு மடங்கு கொண்டது தேவ கந்தர்வாநந்தம்; அது நூறு மடங்கு கொண்டது தேவலோகமடைந்தவர் ஆநந்தம்; அது நூறு மடங்கு கொண்டது தேவரின் ஆநந்தம்; அப்புற மிந்திரனுடைய ஆநந்தம்; பின், ப்ரஜாபதியாகிற ப்ரஹ்மாவின் ஆநந்தம். 'தேயேசதம் .... ப்ரஜாப

ஆநந்தா: ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:॥' ப்ராஜாபதியின் ஆநந்தம் நூறு மடங்கு ஒரு ப்ரஹ்மாநந்தம்; கடைசியில் பகவானுடைய ஆநந்தத்தைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாமல் வேதங்கள் திரும்பிவிட்டன. 'யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ' என்று ஆநந்த வல்லியில் சொல்லப்பட்டிருக்கிறது. "உயர்வற உயர்நல முடையவன்" "எப்பால் எவர்க்கும் நலத்தாலுயர்ந் துயர்ந்த, அப்பால் அவன்" "கொள்ளமாளா வின்பமுடையவன்," "வெள்ளச்சுகம்" (ஆநந்தக்கடல்) "சணக்கறு நலத்தனன்" "வீவிலின்பம் மிக எல்லை நிகழ்ந்தவன்" என்று ஆழ்வார் வெளியிடுகிறார். இந்த தைத்திரீய உபநிஷத்தின்படி "ஏஷ ஹ்யேவாநந்தயாதி" [அவனே ஆநந்தத்துக்குக் காரணம்] என்றும், "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம। ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா॥" அவன் ஸர்வஜ்ஞன்; ஸர்வசக்தியுடையவன்; அவனையும் அவனுடைய கல்யாண குணங்களையும் அவனை யடைகிறவர்கள் அநுபவிக்கிறார்கள். "ரஸꣳ ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி" [பகவானை யடைந்து ஜீவன் பேராநந்தத்தை அடைகிறான்] என்றும் ஆயிற்று. "ஜகத்ஸர்வம் ஶரீரம் தே" [ஸகல சராசரமும் பகவானுக்குச் சரீரம்] ஸகலத்துக்கும் காரணமான ஸர்வாத்மா ஜீவன்களுக்கும் ப்ரக்ருதிக்கும் அந்தர்யாமியாய் நிர்வஹிக்கிற ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தன், ஆநந்த ஸ்வரூபி, ஸகல கல்யாண குணங்களின் ஸமுத்திரம் என்று 5-6-அதிகரணங்களால் ஏற்பட்டது.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

(இன்னும் வரும்.)

கடிதங்கள்.

(1)

சேலம் தமிழ்ச் சங்கம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

இவ்வூரில் செந்தமிழ்ச் சங்கத்தின் ஆறுவது வருடக் கொண்டாட்டம், சென்ற 1917ஞு செப்டம்பர் மீ 22, 23, தேதிகளில், சென்னை பச்சையப்பன் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீமான். தி. செல்வகேசவராயமுதலியார் அவர்கள் M. A., சென்னை தமிழகராதிக் கமிட்டி அங்கத்தினர் செந்தமிழ் வித்வான் ப்ரம்மஸ்ரீ. மு. ராகவையங்கார் அவர்கள், ஆகிய இருபெரியோர்களின் அக்கிராஸனத்தின் கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது.

செவ்வாய்ப்பேட்டை மஹா ஜனங்கள் அக்கிராஸனர்களுக்கும், செந்தமிழ்ப் புலமை நிரம்பிய வித்வான்களுக்கும், வரவேற்புக் காலத்தில் காட்டிய அன்பும் ஆர்வமும் என்ஞான்றும் மறக்கற்பாலன அல்ல.

சுருங்கச் சொல்லின், செந்தமிழ் செழித்தோங்கும் நல்ல காலத்திற்கு இது ஒரு நற்குறி என்றே கூறலாம்.

ஸ்ரீமான். தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், "பழையன கழிதலும்......" என்றதற்கேற்பத் தமிழாசிரியர்கள் தற்கால நவீன முறையில் இலக்கண இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்றும், அதற்கு அவர்க்கு ஆங்கிலஞானம் இருப்பின் அது போதனு முறை விஷயமாகப் பெரிதும் பயன்படும் என்றும் கூறியவை, குழுமியிருந்த யாவரது உள்ளத்தையும் கவர்ந்திருக்கும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. மேலும் பாஷாகர்த்தர்கள் தங்களால் பரீக்ஷிக்கப்படும் மாணவருடைய யோக்கியதையைச் சரிவரக் குணியாது, தங்கள் மனம் போனவாறே கடும் வினுக்களை எழுப்பி மாணவரை அலம் வரச்செய்யும் பாவம் அந்தோ! கொடிது! என்றும் கூறினர். அன்றியும், சிம்லாவில் கல்வி விஷயமாகச் சின்னுள் முன்னர் கூடிய கான்பரன்ஸில் நடந்த நடவடிக்கைகள் பலரும் ஆவலுடன்

எதிர்பார்த்திருந்ததற்கு நேர்விரோதமாக ஆங்கிலக்கல்வி மாணவர்களுக்கு இளமையிலேயே கற்பிக்கப்பட்டு வரவேண்டும் என்று தீர்மானித்தது விசனிக்கத் தக்கதென்றும் கூறி, மஹாமஹோபாத்யாய பட்ட விஷயமாய்ச் சில அபிப்ராயங்களையும், பண்டைத் தமிழ்நூல்கள் பிரசுரிக்கப்பட்டதனால் உண்டாய நன்மைகளையும் விளங்கச் சொல்லித் தன் முகவுரைப் பிரசங்கத்தை இனிது முடித்தார்.

பிறகு, செந்தமிழ் வளர்ச்சிக்குரிய பல அருமையான பிரசங்கங்கள் இனிய தெள்ளிய நடையில் பல பண்டிதமணிகளால் உபநியசிக்கப்பட்டன.

இரண்டாம் நாள் மாலை ப்ரம்ம ஸ்ரீ. மு. ராகவையங்கார் அவர்கள் முகவுரையாகச் செய்த பிரசங்கம் மிகவும் போற்றத் தகுந்தது. இச்சங்கத்தில் கலாசாலை ஒன்று ஸ்தாபித்து, அதன் மூலமாய் மாணவர்கள் தமிழ்க் கல்வியில் தேர்ச்சியடையச் செய்வது சங்கத்தின் முன்னோக்கங்களில் முதன்மையானதா யிருக்கவேண்டும் என்பது. தமிழ்நூலின் பெருமையைத் திருக்குறளின் கல்வி, கேள்வி அதிகாரங்களினின்று அவர் எடுத்துக்காட்டிய "கண்ணுடையரென்பவர்......," "இழுக்கலுடையுழியூற்றுக்கோல்.. ......" "கற்றிலனாயினுங் கேட்க......" என்ற மூன்று செய்யுட்களின் நயங்களை விசதமாக எடுத்துக் காட்டிய தன்மை கற்றோர் மனத்தைக் களிப்பாங்கடலில் ஆழ்த்தியது.

தமது கல்வித் திறமை கேட்டார் வியக்கப் பிரசங்கமாரி பொழிந்த ஸ்ரீமான். மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் சிலப்பதிகார ஆராய்ச்சியில் எடுத்துக் காட்டிய நுணுக்கங்களை வெகு அருமையாய் ஆதரித்து அக்கிராசனாதிபதி அவர்களும் அக்காப்பியத்தின் பெருமையைத் தெள்ளிதின் விளங்கக் கூறினது யாவருக்கும் பழந்தமிழில் ஓர் ஆர்வத்தை எழுப்பியது.

மற்றும் பல அருமையான பிரசங்கங்கள் நடந்தேறின. விரிப்பிற் பெருகும்.

பிறகு மாணவர்களுக்குப் புத்தகப்பரிசு அளிக்கப்பட்டு, அக்கிராசனாதிபதி அவர்களின் புறநானூறு முதலான செந்தமிழ் நூல்களினின்றும் இனிமையாக எடுத்துக்காட்டிய தமிழ் வேந்தரின் சிறப்பும் புலவர்களின் பெருமையும் தமிழ் நூல்களின் அருமையும் ஆகிய முடிவுரையோடு சபை கரகோஷத்துடன் கலைந்தது.

செவ்வாய்ப்பேட்டை.
14-10-17

காரியதரிசி.

(2)

ஸ்ரீ நம்மாழ்வார் ஸபை.

(ஆழ்வார் திருநகரி)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

ஆழ்வார் திருநகரியிலுள்ள ஆஸ்திகஶிரோமணிகளின் பெருமுயற்சியால் சென்ற சித்திரைமீ 13உ புதன்கிழமை இரவு 8-மணிக்கு வைஷ்ணவ ஸங்கம் ஒன்று கூடிற்று. அப்போது ஷையூர் திருப்பதி வேங்கடதேசிகன் என்பவர், தற்காலத்தில் வைதிகவித்யையும் வர்ணாஶ்ரமதர்மங்களும் குறைவாயிருப்பதைப்பற்றியும், அவைகளை வ்ருத்தி செய்யவேண்டியதற்கு வைஷ்ணவர்களுக்குள் த்வேஷமில்லாமல் ஐகமத்ய மிருந்தால் தான் முடியும் என்றும், நம் பூர்வாசார்யர்களுடைய திருவுள்ளக் கருத்தை அடிக்கடி எடுத்து உபதேஶம் செய்யவேண்டியது அவஶ்யமென்றும், ஸ்ரீ வைஷ்ணவ விஶிஷ்டாத்வைத மதத்தை க்ராமாந்தரங்களிலும் போய் உபந்யஸிக்கவேணுமென்றும், நம் ஆழ்வார்களுடைய திருவுள்ளக் கருத்தான ப்ரபத்தி மார்க்கத்தை வ்ருத்திக்குக் கொண்டுவரவேண்டிய விஷயமாயும், இதர பாஷைகளை அப்யஸிக்கும் மாணக்கர்களுக்குப் பால்யம் தொடங்கி வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் தெரியாததனால் அவர்களுக்கு விபரீதாசாரஙகள் நேரிடுவதைப்பற்றியும், அப்படி ஆசாரக்குறைவு வாராமைக்காகத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படிக்கும்பொழுது தொடங்கி ஸம்ப்ரதாய விஷயங்களையும் உபதேசிக்கவேணும் என்றும், மற்றும் சில விஷயங்களையும் நன்கு எடுத்து உபந்யஸித்து, கடைசியாக மேற்கண்ட விஷயங்களை அடிக்கடி உபந்யஸிப்பதற்காக உபயவேதாந்த ஶ்ரவணமான உறைகோயிலென்று ப்ரஸித்தி பெற்ற இந்த ஆழ்வார் திருநகரியிலும், மற்ற திவ்ய தேசங்களில் ஏற்பட்டு நடந்துவருவது போல் ஒரு வைஷ்ணவ ஸபை ஏற்படவேணு மென்றும் வேண்டிக்கொண்டார். அப்போது எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளனைவரும் ஆமோதித்து 'நம்மாழ்வார் ஸபை' என்று பெயர் பூண்ட ஸ்ரீ வைஷ்ணவ ஸபை ஒன்றை ஸ்தாபித்தார்கள். அன்று புதன்கிழமையா யிருந்ததினால் ப்ரதி புதவாரம் இரவு 8-மணிமுதல் 10-அல்லது 11-மணி வரை உபந்யாஸங்கள் நடந்து வருகின்

றன. இந்தச் சபையில் அநேக ஆஸ்திக தனவான்கள் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். ஷை ஸபை இடைவிடாமல் நடந்துவரவேண்டிய செலவுக்காகவும் வருஷோத்ஸவச் செலவுக்காகவும் ஸ்ரீமான்களுடையவும் மடாதிபதிகளுடையவும் திரவிய ஸகாயத்தை எதிர்பார்த்து மிருக்கிறார்கள். இதுவரை 26 - உபந்யாஸங்கள் நடந்திருக்கின்றன.

ஸம்ஸ்க்ருத த்ராவிடவேதங்களில் பண்டிதர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் திவ்யதேச யாத்ரையாய் எழுந்தருளினால் இந்த ஆழ்வார் திருநகரி நம்மாழ்வார் ஸபைக்கு எழுந்தருளி அநேக விஷயங்களை எடுத்து உபந்யஸித்து ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்தை நிலைநிறுத்த வேணுமென்று பிரார்த்திக்கிறேன்.

25-10-17.
ஆழ்வார்திருநகரி

திருப்பதி. வேங்கடதேசிகன்
கார்யதர்சி.

ஸ்ரீ:

பூகோள சாஸ்த்ரம்.

இந்தப் பூமியின் பதினாயிரம் யோஜனை அடியில் அதலம் என்கிற பூமியும், அதற்குப் பதினாயிரம் யோஜனை அடிப்புறத்தில் விதலம் என்கிற பூமியும், அதற்குக் கீழ் அவ்வளவு ஆழத்தில் நிதலம், கபஸ்திமத் மஹாதலம், ஸுதலம், பாதாளம் என்று 7 - உலகங்களும் ஒவ்வொன்றும் பதினாயிரம் யோஜனை ஆழத்தில் இருப்பதால், இந்த 7-பூமிகளும் எழுபதினாயிரம் யோஜனை உயர முள்ளன.

மேற்சொன்ன ஏழு பூமிகளிலும் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் அநேக விதமான நாகங்களும் வஸிக்கின்றனர். இவ்வுலகங்களில் ஸ்வர்க்கலோகங்களில் இருப்பனவற்றைக் காட்டிலும் உத்க்ருஷ்டங்களான உத்யாநங்களும், வாபிகளும், க்ரீடா ஸைலங்களும், மஹா ரூபிணிகளான நாக கந்நிகை முதலான ஸ்த்ரீ ரத்நங்களும் பூர்ணமாக இருக்கின்றனராதலால், அதலம் முதலான உலகங்கள், ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் அதிக ஸுகத்தைக் கொடுக்கின்றன. அங்கு வஸிப்பவர்களுக்குத் திவ்ய ஓஷதி ரஸரஸாயநாநுபவத்தினால் வ்யாதிகளும் கிழத்தன்மையும் உண்டாவதில்லை. எல்லாக் காலத்திலும் அவர்கள் அதிக ஸந்தோஷமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

அவற்றுள் அதலமென்கிற உலகத்தில் மயனுடைய புத்ரன் பலன் என்பவன் வஸிக்கிறான். அவனால் உண்டுபண்ணப்பட்ட 36 விதமான மாயைகளை இக்காலத்திலும் அநேக மாயாவிகள் உபயோகிக்கிறார்கள்.

இரண்டாவதான விதல லோகத்தில், ப்ரஜாவ்ருத்தி செய்வதற்காக ஶிவன் பார்வதியோடு ஸங்கமம் செய்ததாயும், அவர்களுடைய வீர்யம் ஹாடகீ என்ற நதியாக ஓடினதாயும், அக்நி வாயு இவற்றின் ஸம்பந்தத்தினால் அது ஹாடகம் என்கிற தங்கமானதாயும், அதைத் தேவ ஸ்த்ரீகள் நகைகளாகத் தரிக்கின்றன ரென்றும் ஸ்ரீ பாகவதம் 5-ம் அம்ஶம் சொல்லுகிறது.

இதன் கீழ், ஸுதல லோகத்தில் மஹாபலி வஸிக்கிறான். ஸ்ரீவாமநாவதாரம் செய்த பகவான் அவனுடைய பாக்யவஶத்தினால் அவனது க்ருஹத்தில் த்வாரபாலனாக இப்போதும் வஸிக்கிறார். அதனால் அவன் நித்யாநந்த பூர்ணனாக இருக்கிறான்.

இதற்கு அடுத்தபடி கீழே தலாதலத்தில் மயன் என்கிற மாயாவிகளுக்கு ஆசார்யன் வஸிக்கிறான்.

இதன் கீழே மஹாதலத்தில் அநேகம் தலைகளையுடைய தக்ஷகன் முதலான நாகங்கள் வஸிக்கின்றன.

இதன் கீழே நிவாத கவசர் முதலான அஸுரர்கள் வஸிக்கின்றனர்.

இதன் கீழே பாதாளத்தில், வாஸுகி, சங்கன், ஶ்வேதன், தேவதத்தன் முதலான நாக ராஜர்கள் வஸிக்கிறார்கள்.

இதற்கு முப்பதினாயிரம் யோஜனை கீழே, ஆயிரம் ஶிரஸ்ஸையுடைய ஆதிஶேஷன் இவ்வுலகங்களை யெல்லாம் தமது ஶிரஸ்ஸில், புஷ்பமாலையைத் தரிப்பதுபோல் தரிக்கிறார். இந்த ஏழு லோகங்களிலும் பகலில், ஸூக்ஷ்மமான த்வாரங்களின் வழியாக ஸூர்யனுடைய கிரணங்கள் ப்ரவேஶிக்கின்றபடியினாலும், அங்கங்குள்ள நாகரத்நங்களின் காந்திகளாலும் தமஸ்ஸின் உபத்ரவம் இல்லை. ஆனால் ஸூர்ய கிரணங்கள் வெளிச்சத்தை உண்டுபண்ணுகின்றனவே யொழிய, தாபத்தை உண்டுபண்ணுகின்றனவில்லை.

இதற்குமேல் தமஸ்ஸின் கர்த்தோதகத்திற்குக் கீழ், பூமியின் தென்புறத்தில் பாபிகளுடைய பாபத்தை அநுபவிப்பிக்கும் ஸ்தாநமாகிய பல நரக ஸ்தாநங்கள் உண்டு. அவைகளுள் ப்ரதாநமானவை 28; (சிலர் 21-என்றும் கூறுவர்.) இதன் விஸ்தாரம் இவ்விடத்தில் அப்ராப்தமானதால் எழுதப்படவில்லை.

இந்த நரகாநுபவங்கள் அந்தந்த பாபங்களுக்கு ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட ப்ராயஶ்சித்தத்தைச் செய்யாதவர்களுக்கே தவிர, அதை அநுஷ்டித்தவர்களுக்கு இல்லை. அந்தந்த பாபங்களுக்குத் தனித்தனியே மஹர்ஷிகளாற் சொல்லப்பட்ட ப்ராயஶ்சித்தங்களைக் காட்டிலும் பகவத் பக்திரூபமான ப்ராயஶ்சித்தம் தான் உயர்ந்ததென்று 'ப்ராயஶ்சித்தா... ....க்ருஷ்ணாநுஸ்மரணம்பரம்' என்கிற ஸ்ரீ விஷ்ணு புராணம் 2-வது அம்சம் ஆறுவது அத்யாயத்தினாலும், ஸ்ரீ பாகவதம் 6 - வது ஸ்கந்தம்

1-வது அத்யாயம் 'ஸக்ருந் நக்ருஷ்ணவ்யாபாரவிஹாயஸோ:' என்கிற ஶ்லோகத்தினாலும் ஏற்படுகிறது. இங்கு ஸ்ரீ விஷ்ணுபுராண வ்யாக்யானத்தில் ஒரு தடவை செய்யப்படும் பகவந்நாமோச்சாரணமே எல்லாப் பாபங்களுக்கும் ப்ராயஶ்சித்தமாகுமென்று சொல்லி, இப்படியானால் மநுஸ்ம்ருதி முதலானவற்றில் அந்தந்த பாபங்களை உத்தேசித்துச் சொல்லப்படும் ப்ராயஶ்சித்தங்கள் வ்யர்த்தமாகுமேயென்று ஶங்கித்துக் கொண்டு, அதில் ஶ்ரத்தையுள்ளவர்களுக்கு அந்தந்த ப்ராயஶ்சித்தங்கள் ஸ்மரண நாமோச்சாரணங்கள் ஶ்ரத்தையில்லாமல் செய்யப்பட்டாலும், எல்லாப் பாபங்களுக்கும் ப்ராயஶ்சித்தமாகலாமென்றிருக்கிறது. அப்படியே ஸ்ரீதரீய வ்யாக்யானத்திலும், நாமோச்சாரணம் எல்லா ப்ராயஶ்சித்தத்திலும் உயர்ந்தது என்று சொல்லி, ஸ்ம்ருதிகளில் சொல்லப்படும் 12 - வருஷ ப்ராயஶ்சித்தங்கள் எல்லாம் நாமோச்சாரணத்தில் நம்பிக்கையில்லாதவர்களை உத்தேசித்து ஸபலங்கள். 'இதை விஸ்தாரமாகப் பாகவதார்த்த தீபிகையில் சொல்லியிருக்கிறோம்' என்றிருக்கிறது. இந்த ப்ரகரணத்தில் ஸ்ரீபாகவதம் வீரராகவீய வ்யாக்யானத்திலோ, பகவத் ஸ்மரணம், நாமோச்சாரணங்கள் இவைஎல்லாப் பாபங்களையும் போக்கிவிடுமென்கிற வாக்யங்களை பக்தி யோக விஷயமாகவும் ப்ரபத்தியோக விஷயமாகவும் நயநம் செய்யப்பட்டிருக்கிறது. அதிக விஸ்தரபயத்தினால் அவை யெல்லாம் இங்கு எழுதப்படவில்லை. ஸ்ரீ விஷ்ணு சித்தீய ஸ்ரீ தரீய வ்யாக்யானத்தின்படி ஸக்ருத் நாமோச்சாரணமே ஸர்வ பாப நாஶகமானால், 'ப்ராயஶ்சித்தம் நபஶ்யாமி [illegible] ஸத்ருஹா' என்றும், இன்னும் கலியில் சில பாகங்களுக்கு ப்ராயஶ்சித்தம் இல்லை யென்று தர்ம ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுவதும் எப்படி ஸங்கதமாகும்? நாமோச்சாரணமே ஸர்வ பாப நாஶகமானால் ஏன் இதில் நம்பிக்கை உண்டாகக்கூடாது? மற்றுதர ப்ராயஶ்சித்தத்தில் மட்டும் எவ்விதம் நம்பிக்கை உண்டாகுமென்று சில ஸம்ஶயங்கள் ஜனிக்கக் கூடும். அவைகளின் ஸமாதானங்களை விமர்ஶித்துத் தெரிந்து கொள்ளவேணும்.

இவ்வித நரகங்களுக்குக் கீழ் அண்டபித்தியும், அதன்பின் ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாஶம் எனப்படும் ஐந்து பூதங்களும், ஒன்றின் பின் ஒன்றாகப் பதின்மடங்கு அதிகமாக இருக்கின்றன. அதைச் சுற்றித் தாமஸாஹங்காரமும், அதைச்சுற்றி மஹத்தத்வமும், அதன்பின் மூலப்ரக்ருதியும் இருக்கின்றன. அதற்குக் கீழ் எல்லையில்லை. இப்படியே புவர்லோக முதலான லோகங்களுக்கு மேல் பாகத்தில் அண்ட பித்தியும் பஞ்சபூதங்களும் அஹங்கார மஹத்துக்களும் இருப்பது துல்யம். ஆனால் மேல் பாகத்தில் மூலப்ரக்ருதிக்கு மேற்புறம் நித்யவிபூதி என்னும் உலகம் இருப்பதினால் ப்ரக்ருதிக்கு மேற்புறத்தில் அளவு உண்டு; அந்த நித்யவிபூதிக்கு மேல் அளவில்லை.

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

பத்ரிகா விமர்ஶம்.

The Hindu Message (ஹிந்து ஸமாசாரம்) :— இப்பெயர் பூண்ட இங்க்லிஷ் பத்ரிகை ஒன்று, சென்ற அக்டோபர் மாஸம் 25௳ முதல், வாரம் ஒரு முறை ப்ரசுரம் செய்யப் பெற்று வருகின்றது என்று நாம் அறிகிறோம். இதன் ஸம்பாதகர்கள், கும்பகோணம் ப்ரஹ்மஸ்ரீ கே. ஸுந்தரராம ஐயரும் ஸ்ரீரங்கம் ப்ரஹ்மஸ்ரீ டி. கே. பால ஸுப்ரஹ்மண்ய ஐயருமாகிய இரண்டு ஆஸ்திக ஶிரோமணிகள். இதன் அச்சு ஆபீஸ் ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ ப்ரெஸ்; இதை ப்ரசுரம் செய்யும் பாரத்தை வஹிப்பவர் கீழ்க்கூறப்பட்டுள்ள ஸ்ரீ. பாலஸுப்ரஹ்மண்ய ஐயர் அவர்களே. இதன் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன:—

(1) ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் ஆதிபத்யத்திற்குக் குறைவின்றிக்கே இந்தியாவுக்கு ஸ்வாராஜ்யத்தை ஸம்பாதித்துக் கொள்ளுதல்,

(2) வைதிக தர்மத்திற்கு அவிருத்தமாக, இந்தியா தேஶத்திலுள்ள ஸகல ஜாதியாரையும் ஒன்றுசேர்த்தல்,

(3) இந்தியா தேஶத்திற்கு இன்றியமையாத கல்விப்பயிற்சியை ஹிந்துக்களுக்கு ஸம்பாதித்துக் கொடுத்தல்,

(4) ஆமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸுக்கு உபரோதமில்லாமல் ஐஹிகஶ்ரேயஸ்ஸை அபிவ்ருத்தி செய்தல்,

(5) ஹிந்துக்களுடைய ஶாஸ்த்ரீயமான ஜ்ஞாந அநுஷ்டாந ஸம்பத்தை ஸார்வத்ரிகமாகப் பரவச்செய்தல் ஆகவுமாம்.

இம்மாதிரியாக ஒரு பத்ரிகை இப்பொழுது வெளிப்படுவதை, நாம் மிக்க ஆநந்தத்துடன் அபிநந்திக்கின்றோம். அநேக காரணங்களால், நமது தேஶவாஸிகளான ஹிந்துக்கள் இக்காலத்தில் ஆத்ம விஷயமாகப் பெரியதொரு மோஹத்தை அடைந்திருக்கிறார்கள். தேஹ ஸம்பந்தமான துக்க நிவ்ருத்தியையும் ஸுக ப்ராப்தியையும் தேடிக்கொள்வதே இப்பொழுது முக்கிய நோக்கமாக நிற்கின்றது. 'ஆத்மா' என்னும் ஒரு அதீந்த்ரிய வஸ்து உண்டு என்பதே நமது எண்ணத்திற்கு கோசரமாகவில்லை; இரண்டொருவருக்கு அந்த நினைவு சற்று உதித்தாலும், அவர்கள், அதன் ஶ்ரேயஸ்ஸைத் தேடிக்கொள்ள அஶக்தர்களாகவும் அவகாஶமற்றவர்களாகவும் இந்

லோகத்தில்நின்றும் மறைந்து விடுகிறார்கள். நமது பூர்வர்களால் மஹத்தான பரிஶ்ரமத்தின் பேரில் ஸம்பாதிக்கப்பட்டுள்ள ஜ்ஞாந அநுஷ்டாந ஸம்பத் முழுவதும் லுப்தமாகி வருகின்றது. இது போதாதென்று, நமது ஶாஸ்த்ராதிகளைத் தூஷிக்கவும், அந்த ஶாஸ்த்ரங்களால் ஜகத்தின் ஹிதத்தின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள நிபந்தநங்களைக் குலைக்கவும், நிரபராதர்களான ஆஸ்திக ஸாதுக்களை நிந்திக்கவும் அநேக நாஸ்திகர்கள் இப்பொழுது உதித்திருக்கிறார்கள் என்பதும், பகவத் ஸங்கல்பத்தால் தமக்கு ஸம்பவித்திருக்கும் ஸரஸ்வதீ விலாஸ பலத்தை அவலம்பித்து, அவர்கள், அக்ருத்ஸ்ந வித்துக்களாயுள்ள நமது பாலர்களையும் ஸாமாந்ய ஜநங்களையும் ஆஸ்திக்யத்திலிருந்து சலிப்பித்து, லோகத்திற்கு அளவற்ற தீங்கை விளைவிக்கிறார்கள் என்பதும் லோக கதியை விமர்ஶிக்கும் எல்லாருக்கும் புலப்பட்டிருக்கும். இந்தத் துர்கதியை நிவ்ருத்திக்கும் பொருட்டு நமது ஆஸ்திகர்கள் யதா ஶக்தி ப்ரயத்நப்பட வேண்டியது அவர்களது தர்மமே. அது பகவந் முகோல்லாஸ கரமாகவு மிருக்கு மென்பதை உணரும் நாம், அவர்களுடைய ப்ரக்ருத ப்ரயத்நத்தை மிக்க ஸந்தோஷத்துடன் அபிநந்திக்கின்றோம். ப்ராயேண, இங்க்லிஷ் பாஷையை அப்யஸிக்கும் நமது பாலர்களே இம்மாதிரியான ஆபத்துக்கு முக்கியமான விஷயமாக நிற்கிறபடியால், அவர்களுக்கு ஸுக போத மாகும்படி பாஷாந்தரத்தில் இந்தப் பத்ரிகை ப்ரசுரம் செய்யப்படுவதும் உசிதமே.

இது வரையில் ஐந்து ஸஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் நாம் மிக்க ஆநந்தத்துடன் படித்தோம். ராஜ்யதந்த்ர ஸம்பந்தங்களான விஷயங்களைப் பற்றி அநேகவ்யாஸங்கள் எழுதப்பட்டுள்ளன. உத்ஸாஹாதிக்யம் அந்த வழியிலேயே இப்பொழுது ஸர்வஜநங்களுக்கும் சென்று நிற்கிறபடியால், அதன் குணதோஷ விமர்ஶத்தைச் சற்று தீர்க்கமாகச்செய்வது அவ்வளவாக அஸங்கதமன்று. நமக்கு அஸாதாரணமாயுள்ள தர்மம் அநுஷ்டாநம் ஜ்ஞாநம் இவைகளின் ஸாதுத்வத்தைப் பற்றியும், கால வைபரீத்யத்தால் நமக்கு நேர்ந்துள்ள ஶாஸ்த்ர ப்ரம்ஶத்தைச் சீர்திருத்திக்கொள்வதற்கு உரிய ப்ரயத்நங்களைப்பற்றியும், இன்னும் இவை போன்ற மற்றை அம்ஶங்களைப் பற்றியும் பலவ்யாஸங்கள் சீக்கிரத்திலேயே வெளிவருமென்று நாம் நம்புகிறோம். ஜகத்தின் ஹிதத்தை உத்தேஶித்துச் செய்யப்படும் இந்த ப்ரவ்ருத்தியை ஜகத்ரக்ஷகரான ஸ்ரீபகவான் தலைக்கட்டி வைக்க வேண்டு மென்பது நமது ஹார்த்தமான ப்ரார்த்தநை.

இதன் வர்ஷச்சந்தா ரூ 6-0-0. வித்யார்த்திகளுக்கு ரூ 3-0-0.

எஸ். வாஸுதேவன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

இவ்வர்ஷத்திய மஹாஸங்கம்.

திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜ் ப்ரதமோபாத்யாயரான ஸ்ரீ. உப. வேதாந்தாசார்யர், இவ்வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தைத் திருவையாற்றுக்கு ஸமீபத்திலுள்ள திருக்கண்டியூரில் நடத்தவேணு மென்று ஆஹ்வாநம் செய்திருக்கிறார். மிகுந்த உத்ஸாஹத்துடனும் ஆஸ்திக்யத்துடனும் செய்யப்படும் இந்த ஆஹ்வாநம், எல்லாருக்கும் அதிமாத்ரம் அபிமதமாக இருக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ப்ராயேண டிஸம்பர் மாஸம் 26, 27, 28 தேதிகளில் இந்த ஸங்கம் நடைபெறலாம். யதா பூர்வம் வித்வத் ஸதஸ்ஸும் உபந்யாஸங்களும் செய்யப்படும். அநேக வைதிக வித்வான்களும் லௌகிக வித்வான்களும் ஸங்கத்தை அலங்கரிப்பார்கள். அக்காலத்தில் ஸகல ஆஸ்திகர்களும் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து ஸதஸ்ஸின் ஆநந்தத்தை அநுபவிப்பதுடன், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை ஸம்பந்தமான இந்த ப்ரவ்ருத்திக்குத் தம்மால் இயன்ற மட்டில் ஸஹாயத்தைச் செய்து அதை பலப்படுத்துவார்களென்றும் நம்புகிறோம். ஸங்கத்தைப் பற்றிய மற்றை அம்ஸங்கள் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும். நமது தீபிகாபிமாநிக ளெல்லாரும், தீபிகாத்வாரா செய்யப்படும் ஆஹ்வாநத்தைத் திருவுள்ளம்பற்றி க்ருபையுடன் ஸதஸ்ஸை அலங்கரித்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம். ப்ருதக்காக வேறு ஆஹ்வாநபத்ரிகை அனுப்பாமலிருந்தால், அது வ்யயத்தை ஸங்க்ரஹிக்கும்பொருட்டே யென்று அவர்கள் திருவுள்ளம் பற்றவேணும்.

ஸ்ரீ. உப. வேதாந்தாசாரியர், இம்மாதிரி க்ருபையுடன் ஆஹ்வாநம் செய்தது பற்றி, அவருடையவும் அவருக்கு ஸஹாய பூதர்களாக இருக்குமவர்களுடையவுமான விஷயத்தில் இந்த ஸபாப்ரவர்த்தகர்களின் க்ருதஜ்ஞதையை ஸஹர்ஷம் வெளியிடுகிறோம்.

மயிலாப்பூர்,
18—11—17. }

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

சந்தா வரவு.

(1917-அக்டோபர் மாஸம்)

I. சென்ற வருஷத்திய சந்தா :—

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்யர், திருவல்லிக்கேணி	3	0	0
2. ,, ஸி. ஆர். விஜயராகவாசார்யர், திருவல்லிக்கேணி	3	0	0

II. நாளது வருஷத்திய சந்தா :—

1. ஸ்ரீ. உப. எஸ். வாஸுதேவாசார்யர், மயிலாப்பூர்	5	0	0
2. ,, ஸி. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், நுஜெல்லா	3	0	0
3. ,, கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், மர்க்காபூர்	3	0	0
4. ,, கே. கிருஷ்ணமாசார்யர், மயிலாப்பூர்	1	8	0
5. ,, ஸ்ரீநிவாஸ பட்டர், ஸ்ரீரங்கம்	3	0	0

மற்றைச் சந்தாதாரர்களும் தமது சந்தாவைக் கிருபையுடன் விளம்பமின்றிக்கே அனுப்ப வேணு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

மயிலாப்பூர்,
1—11—17.

எஸ். வாஸுதேவன்.

(ஸ்ரீ. வை. ஸி. ஸபை கார்யதர்ஸி)

50 சாமான்கள் இனாம்!! 50 சாமான்கள் இனாம்!!

அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

ராஜ சுந்தரி ரோஜா.

கூந்தல் வளரும் பரிமளத்தைலம்.

50 இனாம் சமான்களுடன் டின் 1-க்கு ரூபா 1—0—0

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரிகளும், தலை மயிர் உதிர்ந்து போகாமலிருக்க வேண்டுமென்று விரும்புகிற ஸ்திரிகளும் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக் கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மதுராதாரமுடைய பரிமளத்தைத் தெரிந்து அவைகளை வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம்பக்கம் வீடுகளும் இதின் வாசனை வீசும். கூந்தலை நீள்மாள் வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும் சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல், தலையில் சுண்டுப்புண் மயிர்வெடிப்பு, மயக்கம், தலைவலி, சொறிசிரங்கு மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் இதுஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமை தெரியும். அனேக நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. அழகான முகம்பார்க்கும் கண்ணாடி 1. தாம்பூலமாத்திரைகள் 30. தந்தச்சீப்பு 1. ராஜாராணி கார்னேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்டு கார்டுகள் 6. அத்தர் பில்லை 1. சந்தனபில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜர்ராணி உள்ள அந்தமான ப்ரூக்ஸ் 1. ஆக 50.

சர்வதேள் விஷ சஞ்சீவி.

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!
விஷந்தீண்டினவன் நிமிஷத்திற்
குணமடைவான்!!
குணமில்லாவிட்டால்
ரூபாய் 100 - இனாம் கொடுக்கப்படும்!!!
விலை பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0
டசன் 1-க்கு ரூ. 5 0 0.

விலாசம்:—வி. ஏ. எஸ். பாணி,
நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

ஸ்ரீ:.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

மதிராஸ்.

1916-17-ம் வர்ஷத்திய எக்ஸிக்யுடிவ் போர்ட்

மெம்பர்களின் பெயர்.

1. ஸ்ரீ. உப. கெ. ஸ்ரீநிவாச ஐயங்கார், } போஷகர்கள்.
2. ஆனரெபில் கெ. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார் }
3. ஸ்ரீ. உப. திவான் பஹதூர், டி. டி. ரங்காசார்யர்—ஸபாத்யக்ஷர்.
4. „ ராவ் பஹதூர், எஸ். ராமஸ்வாமி ஐயங்கார். } உபஸபாத்யக்ஷர்
5. „ டி. ராஜகோபாலாசார்யர். }
6. „ எஸ். வாஸுதேவாசார்யர். } கார்யதர்ஸிகள்.
7. „ டி. கோதண்டராம ஐயங்கார். }
8. „ ஸி. ராஜகோபாலாசார்யர், சித்தூர்.
9. „ டி. நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.
10. „ டி. அநந்தாசார்யர், திருப்பதி.
11. „ குமார சக்ரவர்த்தி ஐயங்கார், திருச்சி.
12. „ வெ. இ. சின்னஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு.
13. „ டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவெவ்வுளூர்.
14. „ ஆர். நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி.
15. „ கே. ஏ. வீரராகவாசார்யர், மதிராஸ்.
16. „ ஸி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவல்லிக்கேணி.
17. „ டி. இ. சடகோபாசார்யர், கூடலூர்.
18. „ வி. ரங்காசாரியர், திருவல்லிக்கேணி.
19. „ என். ரங்கஸ்வாமி அய்யங்கார், கர்னூல்.
20. „ எம். நரஸிம்ஹமாசார்யர், நெல்லூர்.
21. „ ஸி. துரைஸ்வாமி அய்யங்கார், சித்தூர்.
22. „ டி. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், கோயம்புத்தூர்.
23. „ என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம்.
24. „ எஸ். டி. கிருஷ்ண அய்யங்கார், மதுரை.
25. „ கொடியாலம் சேஷாத்திரி அய்யங்கார், ஸ்ரீரங்கம்.
26. „ கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், நாகப்பட்டணம்.
27. „ பி. கே. கருடாசார்யர், மைசூர்.
28. „ பி. ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எழும்பூர்.
29. „ டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.
30. „ எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்.
31. „ வித்தியாபூஷணம் எ. கோவிந்தாசாரியர், மைஸூர்.
32. „ ஸி. கோபாலாசாரியார், பூந்தமல்லி.